CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

# THE KOVAI HERALD
தி கோவை ஹெரால்டு

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 27 | English & Tamil Weekly | 30.11.2025 SUNDAY | 8 Pages | Price Rs.3/-

CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

# செங்கோட்டையனால் சிறிதும் சேதாரம் இல்லை: அதிமுகவினர் நம்பிக்கை

தி கோவை ஹெரால்டு
ஆ.வெ.மாணிக்கவாசகம்



"அவர் அதிமுக மெட்டீரியல்; அதனால் மாற்றுக் கட்சிக்கு போகமாட்டார்" என எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் குறிப்பாக, அதிமுகவினர் நினைத்த வேளையில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தமிழக வெற்றிக்கழகத்தில் இணைந்தது, தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பாகிவிட்டது.

அதிமுகவை உயிர்ப்புள்ள கட்சி ஆக்கி, தமிழகத்தில் அரியணை ஏற்ற வைக்க வேண்டும் என்ற இலக்கு தான் அவர் மனதில் இருந்தது, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். அதற்கான சூழல் கட்சியில் இல்லாததால் செங்கோட்டையன் இந்த முடிவு எடுத்திருக்கிறார் என அவரது ஆதரவாளர்கள் கூறினர்.

தமிழக வெற்றிக்கழக அலுவலகமான பனையூரில் விஜயை சந்தித்த போது, திமுகவில் சேர போகிறீர்கள் என தகவல் வந்ததே என விஜய் கேட்டபோது, அது மீடியாக்கள் செய்தது. நான் தெளிவாக திட்டமிட்டு தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய முடிவு செய்திருந்தேன் என பளிச்சென கூறினாராம்.

செங்கோட்டையன் பனையூர் அலுவலகம் செல்வதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன்பே விஜய் காத்திருந்தார். பொதுவாக எல்லோரும் வந்த பின் தான், விஜய் வருவார். ஆனால் செங்கோட்டையனிடம் உள்ள மரியாதை காரணமாய், அவருக்காக வந்து காத்திருந்தார் என தமிழக வெற்றிக்கழக தொண்டர்கள் கூறினர்.

செங்கோட்டையனை விஜய், மரியாதையுடன் மதிப்புடன் நடத்தி அண்ணன் என கூறி அவரை கட்சியில் இணைத்துக் கொண்டார்.

உங்கள் 50 ஆண்டு கால அனுபவம், தமிழக வெற்றிக் கழகத்திற்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என வரவேற்ற விஜயைக்கு, வெற்றிக்கான பார்முலா நிறைய உள்ளது அதனை, செயல்படுத்த தயாராக இருக்கிறேன் என விஜய்யிடம் கூறியுள்ளார்.

கட்சியில் இணைந்த பின் செய்தியாளர்களிடம் பேசிய செங்கோட்டையன், "இளவல் விஜய்" என புகழ்ந்து தள்ளியது தான் ஹை டெக். புரட்சித்தலைவர் எம்ஜிஆரின் மாணவன், புரட்சித் தலைவி ஜெயலலிதா வழிகாட்டுதலில் அரசியல் செய்தவர் என்ற ஆதங்கம் பலரிடம் இருந்தாலும், அவரது எதிர்கால அரசியலை எதிர் நோக்கியே விஜயுடன் இணைந்துள்ளார் என நடுநிலையாளர்கள் கூறி உள்ளனர்.

செங்கோட்டையன் இந்த செயல்பாடுகளை உற்று கவனித்த அதிமுக தலைமை நிர்வாகிகள், பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியிடம், செங்கோட்டையனை மிஸ் பண்ணி விட்டோமோ என ஆதங்கப்பட்டுள்ளனர்.

அப்படியெல்லாம் யாரும் நினைக்க வேண்டாம்; மாவட்டத்தில் யாரையும் அனுசரிக்காத வரை வைத்துக் கொண்டு என்ன செய்வது? என்று கூறியதுடன், மற்ற பகுதிகளில் அவருடன் தொடர்பு வைத்துள்ள நிர்வாகிகளை கண்காணியுங்கள் என கூறியுள்ளாராம்.

அதிமுகவிலிருந்து முக்கிய தலைவர்கள் வேறு யாரெல்லாம் தவெகவில் இணைகிறார்கள் என்பதை இப்போது சொல்ல முடியாது என செங்கோட்டையன், கூறியுள்ள சூசக தகவலை தொடர்ந்து, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது கட்சி நிர்வாகிகளை அலாட் செய்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

செங்கோட்டையன் என்ற தனி மனிதரால் அதிமுகவிற்கு எந்த வித பாதிப்பும் ஏற்படுத்த முடியாது; எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்திலிருந்தே கட்சிக்கு பெரும் சோதனைகள் வந்துள்ளது.

அதனை எல்லாம் தொண்டர்களின் அசுர பலத்துடன் சமாளித்து அதிமுகவை அரியணையில் ஏற்றினோம்.

தொண்டர்களுடன் தொடர்பில்லாத செங்கோட்டையானால், எஃகு கோட்டையான அதிமுகவை ஒன்றும் செய்ய முடியாது என அதிமுக அடிமட்ட தொண்டர்களின் மனநிலையாக உள்ளது.

## மேற்கு மாவட்டம் என்றுமே அதிமுக தான்...

தமிழக வெற்றிக் கழகத்தில் செங்கோட்டையன் சேர்ந்தது குறித்து தமிழக மேற்கு மாவட்ட அதிமுக நிர்வாகிகள் கூறுகையில், கொங்கு பகுதியான கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட பகுதிகளில் 56 சட்டமன்ற தொகுதிகளில் 40 இடங்களை அதிமுக கடந்த 2021 தேர்தலில் வென்றது. வர இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் கொங்கு பகுதி முழுவதும் அதிமுக அசுர பலத்துடன் வெற்றியை நிலைநாட்டும்.

காரணம் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர் எஸ் பி வேலுமணி உள்ளிட்டோர் கட்சி தொண்டர்களுடன் பெரும் நெருக்கத்தில் உள்ளனர். கட்சி நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயலாற்றி வருகின்றனர்.

மேலும் திமுகவின் நிறைவேற்ற முடியாத வாக்குறுதி, அரசின் மீது உள்ள அதிருப்தி, திமுக நிர்வாகிகளின் பெரும் ஊழல் என அடுக்கடுக்கான மக்கள் விரோத போக்கால் அதிமுகவை பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் விரும்புகின்றனர். அதனால் கொங்கு பகுதி முழுவதும், என்றுமே அதிமுக பக்கம் தான் உள்ளது.

செங்கோட்டையனால், அதிமுகவில் சிறு சேதாரத்தைக் கூட ஏற்படுத்த முடியாது. கோபி பகுதியில் மட்டும் சற்று தாக்கம் இருந்தால் கூட, வரும் தேர்தலுக்குள் அதனை எங்கள் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சரி செய்து முடித்து விடுவார். கட்சிக்கு துரோகம் செய்பவர்களை, கட்சியிலிருந்து நீக்குவது என்பது நடைமுறைதான்.

மீண்டும் சொல்கிறோம் செங்கோட்டையனால், இப்பகுதியில் அதிமுகவிற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என உறுதிப்பட கூறினர்.

## ரமண மகரிஷியின் பொன்மொழிகள்



- நான் என்பது எங்கேயிருந்து புறப்படுகிறதோ அதை கவனித்தால் மனம் அங்கே ஒன்றிவிடும். அதுவே தவம்.
- மனதை எண்ணங்களிலிருந்து விடுவிப்பதே சாதனையின் நோக்கமாகும்.
- நான் என்ற அகந்தை எல்லாச் செயல்களையும் நாமே செய்கிறோம் என்ற தவறான கருத்தை உண்டாக்குகிறது.
- எவ்வளவுக்கு எவ்வளவு பணிந்து நடக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையுண்டு.

LAKSHAKA TEX LIMITED




lifestyle | H&M | MARKS & SPENCER LONDON | Pantaloons | TRENDS | max | SPAR | AVANTRA | WESTSIDE
Reliance digital | croma | INTUNE | SNITCH | THE SLEEP COMPANY | yousta | FUN UNLIMITED | MR.D.I.Y. Always Low Prices | Raymond READY TO WEAR

Participating Brands

Amante | American Tourister | Asus | Acer | Amukti | Aurelia | Agaro | Big Hello | Bata | Crocodile | Crocs | Color Plus | DW | Derby Menswear | EasyBuy | Green Leaf organic | G Fashion Jewellery | Go Colors | Hamleys Horror House Iplanet | Indian Terrain | John Player | Just Watches | Kama Ayurveda | Lenskart | Levis | Louis Philippe | Lensea Makers | Lenova | Lxfx Cosmetics | Mama Earth | Metro | MI Home | Mia | Miniso | Mochi | Mobile Hub | Mufti | Nykaa | One Way | One Plus | Orra | Ocean Sapphire | Peter England | Purplle | Park Avenue Prisma | Puma | Puppy Shame | Reliance Footprints | Roma Blis | Safari | Sapna | Skechers | Sree Devi Fashion | Soch | Studio Lilac | Sunglass Hut | Titan Eye Plus | Tommy Hilfiger | Twin Birds | US Polo | Van Heusen | VIP | Vision Express | W | Wildcraft | Woodland

F&B Brands – Special Offers

Sree Annapoorna | Boomerang | Burger King | Chinese Wok | Dominos Haribhavanam | KFC | Keventers | McDonald's | Pizza Hut | Popeyes | Subway Wow Chicken | Wow China | Taco Bell

Prozone Mall - Coimbatore | prozonemallcoimbatore | www.prozonerealty.com | Sathy Road, Coimbatore

# ராயல் கேர் மருத்துவமனைக்கு ‘புதுமை தொழில்நுட்பம்’ விருது

தி கோவை ஹெரால்டு



மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் க.மாதேஸ்வரன்

ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, அண்மையில் ஒடிசாவின் புவனேஷ்வரில் உள்ள கேஐஐடி -ல் நடைபெற்ற கஹோடெக் 2025-ன் 10-வது பதிப்பில், “எச்.சி.ஓ கண்டுபிடிப்பு & ஆரம்பகால தொழில்நுட்ப தத்தெடுப்பு வெற்றியாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த மதிப்புமிக்க விருதை, இந்தியாவின் மருத்துவ மனைகளின் தர உயர்வு மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முன்னணி இலாப நோக்கற்ற அமைப்பான அங்கீகரிக்கப்பட்ட சுகாதார நிறுவனங்களின் கூட்டமைப்பு வழங்கியது.

மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் க.மாதேஸ்வரன், “மருத்துவத்துறையில் புதுமை மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை கொண்டு நோயாளிகளின் சிகிச்சை, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை மேம்படுத்துவதில் நாங்கள் செலுத்திவரும் அர்ப்பணிப்பை இந்த விருது வெளிப்படுத்துகிறது” என தெரிவித்தார்.

128 போட்டியாளர்கள் மற்றும் 21 இறுதிப் போட்டியாளர்களுக்கு எதிராக, பல சுற்று தீவிரமான விளக்கக்காட்சிகளுக்குப் பிறகு இந்த விருதைப் பெற்றது, நோயாளிகளின் மேம்படுத்தப்பட்ட சிகிச்சைக்கான அதிநவீன மருத்துவ தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்திய ராயல் கேர் மருத்துவமனை மருத்துவ மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்பைப் வலியுறுத்துகிறது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் மற்றும் தெற்காசிய துணைக்கண்டத்திலேயே MRgFUS சிகிச்சை முறையை முதன்முதலாக அறிமுகப்படுத்தி, பார்க்கின்சன்ஸ் நோய் மற்றும் நடுக்குவாதம் ஆகியவற்றை சிகிச்சையளிப்பதில் ராயல் கேர் மருத்துவமனை ஒரு முக்கிய முன்னோடி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. மேலும், “MRgFUS” எனப்படும் இத்தொழில்நுட்பம்— கத்தியின்றி செய்யப்படும் முதல் மூளை அறுவை சிகிச்சை முறையாகும் நடுக்கவாதம், கைநடுக்கம் மற்றும் பார்கின்சன் நோய்க்காக இந்த சிகிச்சை அளிக்க பயன்படுகிறது. இதுவரை 225 நோயாளிகள் இந்த முறையின் மூலம் வெற்றிகரமாக சிகிச்சைப் பெற்றுள்ளனர்.

டாக்டர் என். செந்தில் குமார், கதிரியக்க நிபுணர், ராயல் கேர் மருத்துவமனை இந்த தொழில்நுட்பத்தை மாநாட்டில் விளக்கி, மருத்துவமனை சார்பில் விருதைப் பெற்றார்.

# ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில் தலைமைப் பண்புகளை இணைத்தல் நிகழ்ச்சி




தி கோவை ஹெரால்டு

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின், முதுகலை மேலாண்மைத்துறை சார்பில், “தலைமைப் பண்புகளை இணைத்தல் நிகழ்ச்சி”, கல்லூரி கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் தலைமை வகித்தார். முதுகலை மேலாண்மைத்துறை இயக்குநர் முனைவர் என். பிரேம் ஆனந்த் வரவேற்றுப் பேசினார்.

ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவன பொது மேலாளர் அனுப்குமார் மல்லிக் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவன கூடுதல் பொது மேலாளர் டாக்டர் சிவபிரசாத் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

எஸ்.என்.ஆர்., சன்ஸ் அறக்கட்டளை முதன்மை ஆலோசகருமான மற்றும் கடற்படை முன்னாள் மூத்த அதிகாரியுமான தீபக் பன்சால் வாழ்த்துரை வழங்கினார். அதைத்தொடர்ந்து “ஃகாபி டேபிள் டாக்” என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

நிகழ்ச்சியில் தற்போது தொழில்துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், வளர்ச்சி குறித்து விவாதிக்கப்பட்டது. தரவுகள் தொகுத்தல் மற்றும் உருவாக்குதல், மென்பொருட்களை கையாளும் திறன் குறித்து விவாதிக்கப்பட்டது.

முடிவில் மேலாண்மைத்துறை இரண்டாமாண்டு மாணவர் பிரித்விராஜ் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் மேலாண்மைத்துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# ஹேமமாலினி பிரசவத்துக்காக மருத்துவமனையில் அனைத்து அறைகளையும் புக் செய்த தர்மேந்திரா





பாலிவுட் சினிமாவில் மூத்தநடிகரான தர்மேந்திரா, உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு சமீபத்தில் மரணமடைந்தார். கிட்டத்ததட்ட 60 ஆண்டுகள் அவர் பாலிவுட்டில் நடித்து வந்தார்.

1960 ஆம் ஆண்டு திரையுலகில் அறிமுகமான தர்மேந்திரா, மிக விரைவிலேயே சூப்பர் ஸ்டாராக உயர்ந்தார். காதல் நாயகன் தொடங்கி, ஆக்ஷன் ஹீரோ வரை பலவேடங்களில் நடித்து அசத்தினார். ‘ஷோலே’வில் அவர் நடித்த வீரூ என்ற கதாபாத்திரம், இன்றும் யாராலும் மறக்கமுடியாதது. கடந்த 2012 ஆம் ஆண்டில், இந்திய அரசு அவருக்கு நாட்டின் மூன்றாவது மிக உயரிய விருதான பத்ம பூஷன் விருது வழங்கி கௌரவித்தது. தர்மேந்திரா கடைசியாக, 2024ம் ஆண்டு ஷாருக் கபூர் மற்றும் கிருத்திசனோன் ஆகியோர் நடிப்பில் ‘தேரி பாத்தோன் மே ஐசா உல்ஜா ஜியா’ என்ற திரைப்படத்தில் நடித்திருந்தார். இந்த படத்தில் அவர் ஷாஹித் கபூரின் தாத்தா கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

தர்மேந்திராவின் முதல் மனைவி பிரகாஷ் கவுர், 2-வது மனைவி, நடிகை ஹேம மாலினி ஆவார்கள். முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் மகன்கள் சன்னி தியோல், பாபி தியோல், மற்றும் இரு மகள்களும் உண்டு. இரண்டாவது மனைவியான ஹேமாமாலினிக்கு பிறந்தவர்கள் ஈஷா தியோல், அஹானா தியோல். ஹேமமாலினி நம்ம திருச்சியை சேர்ந்தவர். பாலிவுட்டில் தர்மேந்திராவும் ஹேமமாலினியும் இணைந்து கிட்டத்தட்ட 40 படங்களில் நடித்தனர். அதற்கு பிறகே, காதலித்து 1980ம் ஆண்டு மணந்து கொண்டனர்.

முதல் மனைவியை விவாகரத்து செய்யாமலேயே இவர்கள் திருமணம் செய்து கொண்ட போது, பலரும் இருவரும் விரைவில் பிரிந்து விடுவார்கள் என்று பேசிக் கொண்டனர். பத்திரிகைகளும் வதந்திகளை வெளியிட்டன. ஆனால், இந்த தம்பதி இறப்பு வரை பிரியவே இல்லை. ஆத்மார்த்தமான அன்போடு வாழ்ந்து வந்தனர். அதோடு, ஹேமமாலினி மீது தர்மேந்திரா வைத்திருந்த அன்புக்கு எடுத்துக்காட்டாக, இப்போது புதிய தகவல் ஒன்றும் வெளியாகியுள்ளது.

அதாவது, திருமணத்துக்குப்பிறகு, ஹேமமாலினி கர்ப்பமாகியுள்ளார். பின்னர், பிரவசத்துக்காக மும்பையிலுளள மருத்துவமனை ஒன்றில் ஹேமமாலினி அனுமதிக்கப்பட்டுள்ளார். அப்போது, அந்த மருத்துவமனையின் மொத்த அறைகளையும் தர்மேந்திரா புக் செய்து விட்டாராம். அந்த மருத்துவமனையில் மொத்தம் 100 அறைகள் இருந்துள்ளன. தனது இரு மகள்கள் பிரவசத்தின் போதும் தர்மேந்திரா இவ்வாறு செய்ததாக பேட்டி ஒன்றில் ஹேமமாலினியே தெரிவித்துள்ளார். தனது, மனைவியின் பிரைவேசி கருதியும் ரசிகர்களால் ஏதனும் தொல்லை வந்து விடக் கூடாது என்று கருதியும் தர்மேந்திரா இதைச் செய்ததாக தெரிகிறது.

அதோடு, மகள்களின் வளர்ப்பு விஷயத்திலும் தர்மேந்திரா கடும் கண்டிப்புடன் இருந்ததாக ஹேமமாலினி தெரிவித்துள்ளார். இது பற்றி பேட்டி ஒன்றில் ஹேமமாலினி கூறியதாவது, “நான் பல நடிகர்களுடன் நடித்திருந்தாலும், தர்தேந்திராதான் எனக்கு ஸ்பெஷலாக தெரிந்தார். அவருடன் நடிக்கும் போது, ஒரு பாதுகாப்புணர்வு இருக்கும். எனது கையை தொடுவதில் இருந்து அனைத்து விஷயங்களிலும் இதைக் காண முடியும். அதேபோல, எங்கள் மகள்கள் இஷா, அஹானா ஆகியோரையும் மிகுந்த பாசத்துடன் அவர் வளர்த்தார்’ என்றும் தெரிவித்துள்ளார்.

# ஒருங்கிணைந்த பண்ணை முறை குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் செயல்விளக்கம்



தி கோவை ஹெரால்டு

கிணத்துக்கடவு ஒன்றியம் குதிரையாலம் பாளையம் ஊராட்சியில், அம்ரிதா பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள், கிராமப்புற வேளாண் அனுபவத்தின் ஒருபகுதியாக உயிர் உரங்களான அசாடோ பாக்டீரியா, மெட்டாரைசியம், பாஸ்போபாக்டீரியா ஆகியவற்றின் பயன்கள் குறித்தும், பிரதமமந்திரி பயிர் காப்பீடு திட்டம், மண்ணின் ஈரப்பத பாதுகாப்பு குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினர்.

தென்னையில் சாறு வடிதல் நோய்க்காக போர்டோ கலவை செய்வது எப்படி என்று செயல்முறை விளக்கம் அளித்தனர். ஒருங்கிணைந்த பண்ணை முறை விவசாயம் மற்றும் அதன் பயன்களை விளக்கினார். தொடர்ந்து பசுந்தாள் உரம் மற்றும் பச்சை இலை உரத்தின் பயன்கள் மேய்சர்காடு செய்முறை பயன்கள், விவசாயிகளுக்கான செயலிகளுக்கு (உழவன் செயலி, பிளான்டிக்ஸ் செயலி, இ-நாம்) விண்ணப்பிக்கும் முறை குறித்து விளக்கினர்.

இந்நிகழ்வில் அம்ரிதா வேளாண் கல்லூரி முதல்வர் சுதீஷ் மணாலில், உதவி பேராசிரியர்கள் இனியகுமார், யசோதா, முருகவேல், மாணவர்கள் மாதேஷ், ஹரிசூர்யா, அனன்யா, அஞ்ஜிதா உள்ளிட்ட மாணவர்கள் பங்கேற்றனர். கிராமப்புற வேளாண் அனுபவ திட்டத்தில், குதிரையாலம்பாளையம் கிராமத்தில், தென்னை சாறு வடிதல் நோய்க்காக போர்டோ கலவை தயாரித்தல் குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் செயல்முறை விளக்கம் அளித்தனர்.

# ஸ்லீப்பர் பயணிகளுக்கும் போர்வை, தலையணை ஜனவரி 1 முதல் வழங்க ரயில்வே திட்டம்




இந்தியாவில் தினமும் கோடிக்கணக்கான பயணிகள் ரயில் மூலம் பயணம் செய்து வருகின்றனர். பயணிகளுக்கான சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் ரயில்வே நிர்வாகம் தொடர்ந்து புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, இப்போது ஸ்லீப்பர் பெட்டியில் பயணிப்பவர்களுக்கும் போர்வை மற்றும் தலையணை வழங்கும் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்பு குளிர்சாதன (AC) பெட்டியில் பயணிப்பவர்களுக்கு மட்டுமே போர்வை மற்றும் தலையணை வழங்கப்பட்டுவந்தது. தற்போது, இந்த சலுகையை ஸ்லீப்பர் பயணிகளுக்கும் விரிவுபடுத்த ரயில்வே அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இந்த திட்டம் 2026 ஜனவரி 1 முதல் நாடு முழுவதும் நடைமுறைக்கு வர உள்ளது. தேவைப்படும் பயணிகள், பயணத்தின் போது ரயிலில் பணிபுரியும் பணியாளர்களிடம் கட்டணத்தை செலுத்தி போர்வை மற்றும் தலையணையை பெற்றுக்கொள்ளலாம். போர்வை ரூ.20க்கும் தலையணை ரூ.30க்கும் வழங்கப்பட உள்ளது.

முதற்கட்டமாக, சென்னை கோட்டத்தின் கீழ் இயங்கும் நீலகிரி சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ், மங்களூர் சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ், மன்னார்குடி எக்ஸ்பிரஸ், திருச்செந்தூர் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ், பாலக்காடு எக்ஸ்பிரஸ், சிலம்பு சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ், தாம்பரம் நாகர்கோவில் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ், திருவனந்தபுரம் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ், ஆலப்புழா சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ், மங்களூர் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ஆகிய 10 ரயில்களில் இந்த சேவை தொடங்கப்படுகிறது:

ரயில்வே பயணிகளை மேலும் வசதியாக்கும் இந்த புதிய முயற்சி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறும் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# பாலியல் பிரச்னைக்கு சித்த வைத்தியரிடத்தில் 48 லட்சத்தை இழந்த ஐ.டி ஊழியர்

பெங்களுருவைச் சேர்ந்த ஐ.டி. ஊழியர் ஒருவருக்கு கடந்த 2023ம் ஆண்டு திருமணம் ஆகியுள்ளது. திருமணமான சில நாட்களில் அவருக்கு பாலியல் ரீதியாக குறைபாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, உயர்தர மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுளளார். ஆனால், முன்னேற்றம் ஏற்படவில்லை.

இந்த நிலையில், கடந்த மே மாதம் பெங்களுரு கேஎல்ஈ சட்டக்கல்லூரி முன்பு, ஆயுர்வேதிக் தவக்கானா என்ற பெயரில் அமைந்திருந்த டெண்ட் மருத்துவமனையை பார்த்துள்ளார்.

அதன் முன்பு, ‘பாலியல் ரீதியான குறைபாடுகளுக்கு உடனடியாக, பலன் கிடைக்கும் ‘என்றும் பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

உடனே, அந்த இளைஞர் டெண்ட்டுக்குள் இருந்த ‘வைத்தியரை’ அணுகியுள்ளார்.

அந்த வைத்தியர் தன்னை விஜய் குருஜி என்று அறிமுகம் செய்து கொண்டுள்ளார்.

அதோடு, தான் கொடுக்கும் அரிய வகை மூலிகை மருந்துகளை சாப்பிட்டால், உடனடியாக பாலியல் குறைபாடு நீங்கும் என்றும் அந்த இளைஞரிடத்தில் ஆசை வார்த்தை கூறியுள்ளார். இந்த மருந்தின் பெயர் தேவராஜ் பூதி என்றும் தெரிவித்ததோடு, ஒருகிராம் மருந்தின் விலை 1.6 லட்சம் என்றும் கூறியிருக்கிறார். மேலும், ரொக்கமாகத்தான் பணத்தை தர வேண்டும். இதனுடன், சேர்ந்து மற்றொரு மருந்தான பாவானா பூதி தைலம் என்பதையும் வாங்கிக் கொள்ள அறிவுறுத்தியுள்ளார். இதன் விலை ஒருகிராம் 76 ஆயிரம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, தனது மனைவியிடம் விஷயத்தை கூறிய அந்த இளைஞர் முதலில் மொத்தம் 17 லட்சத்துக்கு அந்த மருந்தை வாங்கி சாப்பிடத் தொடங்கியுள்ளார்.

அதோடு அந்த விஜய் குருஜி விடவில்லை. இந்த மருந்தை தொடர்ந்து, சாப்பிட வேண்டும். இல்லையென்றால், சிகிச்சை பலன் தராது என்றும் கூறியிருக்கிறார். இதையடுத்து, வங்கியில் 20 லட்சம் மற்றும் நண்பர்களிடத்தில் கடன் வாங்கி மொத்தம் 48 லட்சத்துக்கு மருந்தை வாங்கி அந்த இளைஞர் சாப்பிட்டுள்ளார். ஆனால் எந்தப் பலனும் இல்லை. இதனால், பாதிக்கப்பட்ட இளைஞர் பெங்களுரு ஜனனபாரதி போலீஸ் நிலையத்தில் விஜய் குருஜி மீது புகாரளித்துள்ளார். இதற்கிடையே, விஜய் குருஜி தப்பித்து ஓடி விட்டார். தொடர்ந்து, அவரைப் பிடிக்க போலீசார் முயற்சித்து வருகின்றனர்.

சித்த வைத்தியரிடத்தில் இளைஞர் ஏமாந்த தகவல் வெளியாகி பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இணையத்திலும், விவாதப் பொருளாக மாறியுள்ளது. ‘மெத்தப்படித்தவர்கள்தான் இப்படியெல்லாம் ஏமாறுகிறார்கள். என்னால், நம்பவே முடியவில்லை ‘ என்று ஒரு நெட்டிசன் பதிவிட்டுள்ளார். மற்றொருவர், ‘பெங்களுரு நகரம் முழுவதுமே, இது போன்ற ஆயுர்வேதிக் தவக்கானாவை காண முடிகிறது. இவர்களுக்கு கடிவாளம் போடுவது யார்?’ என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

# கோவை செம்மொழி பூங்காவை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்





**தி கோவை ஹெரால்டு**

கோவை காந்திபுரம் பகுதியில் செம்மொழிப் பூங்கா கட்டுவதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த 2023-ம் ஆண்டு அடிக்கல் நாட்டினார்.

கோவை மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் நிலப்பரப்பில் பூங்கா அமைக்க முடிவுசெய்யப்பட்டது. முதல் கட்டமாக 45 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.208 கோடி மதிப்பில் செம்மொழிப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார். அப்போது அமைச்சர் கே.என். நேரு, முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி, மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க. கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

செம்மொழிபூங்காவில், செம்மொழி வனம், மூலிகைதோட்டம், மகரந்த தோட்டம், நீர்த் தோட்டம், மணம்கமிழ் தோட்டம். பாலைவனத் தோட்டம், மலர்த் தோட்டம், மூங்கில் தோட்டம், நட்சத்திர தோட்டம், ரோஜாதோட்டம், பசுமை வனம் போன்ற 23 வகையான தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல் திறந்த வெளி வளாகம், ஓய்வறை, உணவகம், நடைபயிற்சி மேற்கொள்வதற்கானவசதி, 14 ஆயிரம் சதுர அடியில் குழந்தைகளுக்கான விளையாட்டுத் திடல், கடையேழு வள்ளல் சிலைகள், திறந்தவெளி உடற்பயிற்சிகூடம், பேட்டரி வாகன வசதி, 4.2 ஏக்கரில் பார்க்கிங் வசதி ஆகியவை செய்யப்பட்டுள்ளது. இந்த பூங்கா டிசம்பர் 1 முதல் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் செம்மொழிபூங்காவுக்கான நுழைவுக் கட்டணம் குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி பெரியர்களுக்கு ரூ.15, சிறியவர்களுக்கு ரூ.5 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேபோல் செம்மொழிபூங்காவிற்குள் வீடியோ கேமராவுக்கு ரூ.50 கட்டணமாகும்.

# ஜி ஸ்கொயர் 'தி ரெசிடென்சி' மனைத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார் நிறுவனர் பாலா ராமஜெயம்




▸ கோவையில் ஜி ஸ்கொயர் தி ரெசிடென்சி மனை பிரிவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார் நிறுவனர் பாலா ராமஜெயம்

**தி கோவை ஹெரால்டு**

கோவையின் மையப்பகுதியில் வர்த்தகமும் குடியிருப்பும் இணைந்த அதிநவீன வசதிகளுடன் கூடிய மனைத்திட்டத்தை ஜி ஸ்கொயர் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவின் முன்னணி வீட்டுமனைத் திட்ட மேம்பாட்டு நிறுவனமான ஜி ஸ்கொயர், 'தி ரெசிடென்சி' என்ற இந்த புதிய திட்டத்தை சுமார் 16.3 ஏக்கர் பரப்பளவில் ரூ.750 கோடி முதலீட்டில் உருவாக்கியுள்ளது.

ஜி.வி. ரெசிடென்சி அருகே, பீளமேடு மற்றும் ராஜீவ் காந்தி நகரம் உள்ளிட்ட வேகமாக வளர்ந்து வரும் குடியிருப்பு பகுதிகளுக்கு அருகில் அமைந்துள்ள இந்த மனைத்திட்டம், கோயம்புத்தூரில் கனவு இல்லம் அல்லது வர்த்தக கட்டிடம் அமைக்க விரும்புவோருக்கு முக்கியமான தேர்வாகக் கருதப்படுகிறது.

திட்டத்தின் அறிமுக சலுகையாக சந்தை விலையை விட 30% குறைவாக, ஒரு சென்ட் ரூ.29.9 லட்சமாக நிர்ணயித்திருப்பது முதலீட்டாளர்களிடையே பெரும் கவனம் பெற்றுள்ளது.

ரேஸ் கோர்ஸ் பகுதியிலிருந்து சில நிமிடங்களில் சென்றடையக்கூடிய இந்த இடத்தில், தற்போதைய சந்தை நிலவரப்படி நிலத்தின் மதிப்பு விரைவில் இருமடங்காக உயரக்கூடும் என மதிப்பிடப்படுகிறது.

இதன்துவக்கவிழாவில் பேசிய ஜி ஸ்கொயர் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குனர் பாலா ராமஜெயம் "ஜிஸ்கொயர் தி ரெசிடென்சி என்பது வெறும் நிலம் வாங்கும் முதலீடல்ல; கோவையில் மிகமுக்கியமான வர்த்தக மற்றும் குடியிருப்பு வளர்ச்சியில் ஒருபகுதியாக மாறும் வாய்ப்பு. ப்ரீமியம் தரம், சிறந்த விலை மற்றும் உயர்தர திட்டமிடலுடன் கோவையில் புதிய தரத்தை அமைக்கும் மனைத்திட்டமிது" என்று கூறினார்.

பாதுகாப்பான வளாக குடியிருப்பு சூழல், பரந்த உட்புற சாலைகள், நன்கு திட்டமிடப்பட்ட அவென்யூ சாலைகள், உயர்தர உள்கட்டமைப்பு வசதிகள், ஸ்மார்ட் பாதுகாப்பு அம்சங்களுடன், எதிர்கால டவுன்ஷிப் முறைப்படி இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் தங்களுடைய வர்த்தக இடங்களையும் இல்லங்களையும் வாஸ்து சாஸ்திரத்துக்கு ஏற்ப தனிப்பட்ட முறையில் வடிவமைத்துக்கொள்ளும் சுதந்திரத்தையும் இது வழங்குகிறது.

# 180 நாட்களுக்குள் பட்டம் வழங்க வேண்டும் - யுஜிசி உத்தரவு

உயர்கல்வி நிறுவனங்களில் தேர்வுகள் நடத்துவதிலும், மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்குவதிலும் தொடர்ந்து ஏற்படும் தாமதங்களைப் பற்றி பல்கலைக் கழக மானியக் குழு (யுசிஜி) கடும் கவலை தெரிவித்துள்ளது. இத்தகைய தாமதங்கள் மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் மேற்படிப்பு வாய்ப்புகளை நேரடியாகப் பாதிப்பதாகவும், கல்வி முறையில் சீர்கேடு ஏற்படுத்துவதாகவும் யுசிஜி தெரிவித்துள்ளது.

சில உயர்கல்வி நிறுவனங்கள் தேர்வுகளை நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவுக்கு உட்பட்டு நடத்தாமல் அல்லது முடிவுகளை வழங்குவதில் தாமதம் செய்யும் நிலை தொடர்கிறது. இதனால் மாணவர்கள் தகுதியான வேலைவாய்ப்புகளைப் பெறுவதும், மேலும் கல்வி முயற்சிகளைத் தொடர்வதும் சிரமமாகிறது என யுசிஜி தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

யுசிஜி (பட்டங்கள் மற்றும் பிற விருதுகளை வழங்குதல்) விதிமுறைகள் 2008, பிரிவு 4.4 படி, ஒரு மாணவர் பட்டம் பெறத் தகுதியான நாளிலிருந்து 180 நாட்களுக்குள் பல்கலைக்கழகங்கள் பட்டங்களை வழங்க வேண்டும். அதேபோல், கல்வி அட்டவணைபடி தேர்வுகளும் முடிவுகளும் சரியான நேரத்தில் அறிவிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும்.

விதிமுறைகளைக் கடைப்பிடிக்காதும், தாமதத்தை முறையாகச் சரிசெய்யாதும் இருக்கும் நிறுவனங்கள் மீது தண்டனை நடவடிக்கை எடுக்க யுசிஜிக்கு அதிகாரம் உண்டு என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மாணவர்களின் கல்வி மற்றும் தொழில் முன்னேற்றம் பாதிக்கப்படாத வகையில் நேரத்துக்கு ஏற்ற தேர்வு நடத்தல், முடிவு வெளியீடு மற்றும் பட்டமளிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துமாறு யுசிஜி மறுபடியும் வலியுறுத்தியுள்ளது.

# இனி விமானங்களில் இருமுடி எடுத்துச் செல்லலாம்



மத்திய சிவில் விமான போக்குவரத்து மந்திரி ராமமோகன் நாயுடு தனது 'எக்ஸ்' பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில், அய்யப்ப பக்தர்களின் பாரம்பரிய உணர்வுகளை மதிக்கும் பொருட்டு புதிய முடிவொன்றை அறிவித்துள்ளார்.

அதில், புனிதமான இருமுடியுடன் தொடர்புடைய பக்தர்களின் மதஉணர்வுகளை கருத்தில் கொண்டு, விமானங்களில் அய்யப்ப பக்தர்கள் தங்களுடன் இருமுடியை எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார். இதன்படி, பொருட்கள்வைக்கும்சரக்கு பகுதிக்கு அனுப்பாமல், பயணிகள் பகுதியில் கொண்டுசெல்லும் 'கேபின் லக்கேஜ்' ஆக இருமுடியை வைத்துக்கொள்ளலாம்.

இது மூலம், பக்தர்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை அமைச்சகம் உறுதி செய்துள்ளதாக அவர் கூறினார். தேவையான அனைத்து பாதுகாப்புவிதிமுறைகளும் பின்பற்றப்படும் என்றும், அதே வேளையில் பக்தர்களின் உணர்வுகளுக்கு முழு மதிப்பு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அனைத்து சமுதாயங்களின் நம்பிக்கைகளுக்கும் மரியாதை அளிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

# ஜெய்பூருக்கு கோவையிலிருந்து சிறப்பு ரயில் சேவை தொடக்கம்



கோவையில் இருந்து ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூருக்கு சிறப்பு ரயில் சேவை இயக்கப்பட இருப்பதாக சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டதாவது:

கோவை ஜெய்பூர் வாராந்திர சிறப்பு ரயில் (எண்: 06181) டிசம்பர் 18, 25 ஆகிய வியாழக்கிழமைகளில் அதிகாலை 2.30 மணிக்கு கோவையிலிருந்து புறப்படும். இந்த ரயில் சனிக்கிழமைகளில் மதியம் 1.25 மணிக்கு ஜெய்பூரை சென்றடையும்.

மறுமுனையில், ஜெய்பூர் கோவை சிறப்பு ரயில் (எண்:06182) டிசம்பர் 21, 28 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 10.05 மணிக்கு ஜெய்பூரில் இருந்து புறப்பட்டு, புதன்கிழமைகளில் காலை 8.30 மணிக்கு கோவை ரயில் நிலையத்தை வந்தடையும்.

இந்த ரயில் சேவை திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, ரேணிகுண்டா, கடப்பா, கூட்டி, கர்ணூல் சிட்டி, காச்சிகுடா, நிஜாமாபாத், அகோலா, மாலிக்பூர், நசீராபாத், அஜ்மீர் உள்ளிட்ட பல நிலையங்களில் நிற்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அரசியலமைப்பு ஏன் ஹீலியம் பெட்டியில் பாதுகாக்கப்படுகிறது?

இந்தியஅரசியலமைப்பு 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் நினைவாக, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26 "இந்திய அரசியலமைப்பு தினம்" எனக் கொண்டாடப் படுகிறது.



1947 ஆம் ஆண்டு இந்தியாபிரித்தானிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றபின், நாட்டிற்கு தனித்துவமான அரசியலமைப்புஉருவாக்க தேவையாயிற்று. இதற்காக முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமையில் அரசியல் அமைப்பு நிர்ணயக் குழு அமைக்கப்பட்டது. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகளின் அரசியலமைப்புகளில் இருந்துமுக்கிய அம்சங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுசேர்க் கப்பட்டன. அரசியலமைப்பு வரைவதை முடிக்க 2 ஆண்டுகள், 11மாதங்கள், 18 நாட்கள் ஆனது. இறுதியில் உருவான ஆவணத்தில் 395 ஷரத்துகள் மற்றும் 8 அட்டவணைகள் இடம்பெற்றன.

இந்த ஆவணம் உலகிலேயே கையால் எழுதப்பட்ட மிக நீளமான அரசியலமைப்புகளில் ஒன்றாகும். ஆங்கில வடிவத்தில் மட்டும் 1,17,369 வார்த்தைகள் உள்ளன. ஆங்கில பிரதியை பிரேம் பிஹாரி நாராயண் ரைசாடா கையால் எழுதியார்; இந்தி பிரதியை வசந்த் கிருஷ்ண வைத்யா எழுதியார். மொத்தம் 283 உறுப்பினர்கள் இவ்வாவணத்தில் கையெழுத்திட்டனர்.

கையால் எழுதப்பட்ட அசல் அரசியலமைப்பு, நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயுவால் நிரப்பப்பட்ட சிறப்பு காற்றுப்புகா பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணம் மிகவும் பழமையானதுடன் கருப்பு மையால் எழுதப்பட்டிருப்பதால், ஆக்ஸிஜன் தொடர்பால் மை மெதுவாக ஆவி போய்மங்கிவிடும். இதைத் தடுக்கும் வகையில், ஆவணத்தில் ஆக்ஸிஜன் சேராத சூழலை உருவாக்க வேண்டியது அவசியமாக இருந்தது.

இதற்காக, ஒவ்வொரு பக்கமும் நாப்தலீன் பந்துகள் சேர்த்த ஃபிளானல் துணியால் சுற்றப்பட்டு பக்கநோய், பூஞ்சை, கரையான் சேதம் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டது. மேலும், மை மங்காமல் இருக்க, பெட்டகத்தின் உள்ளே ஒருகன்மீட்டருக்கு 50 கிராம் ஈரப்பதமோட்டம் மட்டுமே இருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

ஹீலியம் வேறு எந்த வேதியியல்தன்மையுடனும் வினைபுரியாத வாயு என்பதால், ஆவணத்தின் ஆயுள் அதிகரிக்க ஹீலியம் நிரப்பப்பட்ட காற்றில்லா பெட்டகம் சிறந்த பாதுகாப்பு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்த ஹீலியம் பெட்டகம் ஒவ்வொரு 2 மாதங்களிலும் ஒருமுறை பரிசோதிக்கப்படுகிறது. மேலும், ஆண்டுக்கு ஒருமுறை பெட்டகத்தின் உள்ளே நிரப்பப்பட்டுள்ள ஹீலியம் வாயு மாற்றப்படுகிறது. இந்த உயர்தரப் பாதுகாப்பு அமைப்பை தேசிய இயற்பியல் ஆய்வகம், அமெரிக்காவின் "கெட்டி ஆராய்ச்சி நிறுவனம்" (Getty Research Institute) ஆகியவை இணைந்து வடிவமைத்தன.

# ரூ.500 நோட்டுகளை விளை நிலத்தில் விதைத்த விவசாயி

ராஜஸ்தான் மாநில நாகௌர் மாவட்டத்தில் ஓர் விவசாயி நடத்திய வினோதமான போராட்டம் நாடு முழுவதும் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது. தன்னுடைய விவசாய நிலத்தில் ரூ.500 நோட்டுகளை விதைத்து போராட்டம் நடத்திய விவசாயி.



நாகௌர் மாவட்டத்தின் தியோரியா ஜாதன் கிராமத்தை சேர்ந்த மல்லாராம் பவாரி என்ற விவசாயி, வங்கியில் ரூ.1 லட்சம் கடன் பெற்று பருத்தி பயிர் சாகுபடி செய்திருந்தார். ஆனால் தொடர்ந்து பெய்த அதிக மழையின் காரணமாக வயலில் நீர் தேங்கியதால் பயிர் முற்றிலும் நாசமாகியது. ஒரு சீசனுக்குள் கடும் உழைப்பையும் கடனின் அழுத்தத்தையும் தாங்கி உழைத்த அவர், இறுதியாக ரூ.4,000 மதிப்புள்ள சொற்ப விளைச்சல் மட்டுமே பெற்றார்.

இதையடுத்துஅவர்பயிர் காப்பீட்டு தொகைக்காக முறையிட்டிருந்தார். ஆனால் அதற்கான நிவாரணம் வழங்கப் படாததால், மனவேதனையுடன் இந்த வினோதமான போராட்டத்தை முன்னெடுத்துள்ளார். இதனை பதிவு செய்த வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டு மக்கள் கவனத்தை பெரிதும் ஈர்க்கின்றன.

தனியார்தொவெளியிட்ட வீடியோவில், மல்லாராம் பவாரி தன் வயலில் ₹500 நோட்டுகளை விதைப்பது போல செயல்படும் காட்சி காணப்படுகிறது.

வயலின் நாசத்துக்கு அரசு மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதைக் குறிப்பதற்காக அவர் இப்படிப்பட்ட போராட்டத்தை நடத்தியதாககூறப்படுகிறது.

இந்த போராட்டம் விவசாயிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைமீண்டும்ஒருமுறை வெளிக்கொணர்ந்துள்ளது.

## நாடார் மஹாஜன சங்கம் கோவை மாவட்ட புதிய நிர்வாகிகள் நியமனம்



தி கோவை ஹெரால்டு

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பழவிளையில்உள்ளநா.ம.ச காமராஜர் தொழில்நுட்பக் கல்லூரியில் நியமனப் பதவிகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வு, நாட்டின் நூற்றாண்டு பாரம்பரியத்தைக் கொண்ட நாடார் மஹாஜன சங்கம் மதுரை தலைமையகத்தில் செயல்படும் அமைப்பின்பொதுச்செயலாளர் ஜி. கரிக்கோல்ராஜ் நாடார் தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் குழுவின் பரிந்துரையின் பேரில் அமைந்தது.

கோவை மாநகர் மாவட்ட செயலாளர் டி.சி. விஜயகுமார் நாடார் அறிவுறுத்தலின்படி புதிய நிர்வாக நியமனங்கள் அறிவிக்கப்பட்டன. இதன்படி, கோவை மாநகர் மாவட்டத் தலைவராக மரியாதைக்குரிய கே. ராஜு (எ) கருணாமூர்த்தி நாடார் நியமிக்கப்பட்டார். மேலும், நாடார் மஹாஜன சங்கத்திற்கு கௌரவ செயற்குழு உறுப்பினர்களாக மரியாதைக்குரிய எஸ். கார்த்தீசன் நாடார் மற்றும் என்.எல்.ஜே. சபாபதி நாடார் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

நியமனச் சான்றிதழ்களை வழங்கிய உயர் நிலைக்குழுநிர்வாகிகளுக்கு கோவை மாவட்டம் சார்பில் இதயம் கனிந்த நன்றிகள், வாழ்த்துகள் மற்றும் மகிழ்ச்சிகள் தெரிவிக்கப்பட்டன. இந்த நியமனத்தின் மூலம் சங்கத்தின் சேவைச் செயல்பாடுகள் கோவையில் மேலும் வலுவாக முன்னேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அவசர மருத்துவ சேவைகளுக்கு புதிய எண் அறிவிப்பு: சுகாதாரத்துறை

தமிழகத்தில்அனைத்து அவசரங்களுக்கும் ஒரே 108 எண்ணின் மூலம் ஆம்புலன்ஸ் சேவை வழங்கப்பட்டு வந்த நிலையில், இனி சேவை பிரிவுகளுக்கேற்ப தனித்தனியான புதிய எண்கள்அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இதன் மூலம் அவசர நிலைகளில் விரைவான மற்றும் துல்லியமான மருத்துவஉதவிகிடைக்கும் என கூறப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு விரைவான மருத்துவ உதவி கிடைக்க 102 என்றபுதியஹெல்ப்லைன் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இது மாதர்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு ஆம்புலன்ஸ் சேவையாக செயல்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சாலை விபத்துகளுக்கான உடனடி ஆம்புலன்ஸ் உதவி பெற 1073என்றபுதியஎண்மூலம் தொடர்பு கொள்ளலாம். விபத்து தகவலை நேரடியாக பகிர்வதால் மீட்பு நடவடிக்கை வேகம் பெருகும் என கூறப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இலவச மருத்துவ ஆலோசனை பெற 104 ஹெல்ப்லைன் தொடர்ந்து செயல்படும். இந்த எண்ணின் மூலம் 24 மணி நேரமும் மருத்துவ ஆலோசனை, சுகாதார தகவல்கள் வழங்கப்படும்.

முழுமையான பொதுவான அவசர சூழ்நிலைகளுக்கு 108 எண் தொடர்ந்து செயல்படும். எனினும், இனி அனைத்து பிரிவுகளுக்கும் ஒரே எண் பயன்படுத்தப்படாமல், புதிய எண்கள் சேவைகள் வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

புதிய மாற்றங்கள் குறித்து பொதுமக்கள் முழுமையாக விழிப்புணர்ச்சி அடைவதை உறுதி செய்ய சுகாதாரத்துறை அறிவிப்புகள், பிரச்சாரங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. புதியஎண்கள்உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.

## இந்தியன் ஒலிம்பிக் மல்யுத்தம் போட்டியில் தங்கம் வென்ற கோவை மாணவ, மாணவிகள்




தி கோவை ஹெரால்டு

இந்தியன் ஒலிம்பிக் சங்கத்தில் ஒரு அங்கமாகவும், Ministry of youth Affairs and Sports (MYAS) இல் இணைப்பு பெற்ற வியம் பாரத் (Vyayam Bharat) அமைப்பின் மூன்றாவது தேசிய அளவிலான போட்டி மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் நவம்பர் மாதம் 21 2223 ஆகிய மூன்று நாட்கள் somalwar பள்ளியில் நடைபெற்றது. இந்த தேசிய போட்டிக்கு பல்வேறு மாநிலங்களில் இருந்து பல்வேறு விளையாட்டுகள் மற்றும் தற்காப்பு கலைவீர வீராங்கனைகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள் தமிழ்நாட்டின் சார்பாக கோவைமாவட்டத்திலிருந்து மல்யுத்த போட்டிக்கு தமிழ்நாடுவியம் சங்கத்தின் சார்பாக தென்னிந்திய தலைவர் எஸ்.புவனேஸ்வரி மற்றும் தென்னிந்திய பொதுச் செயலாளர் செந்தில் நாதன் புகழ் அவர்களின் ஏற்பாட்டின் பேரில், தலைமையேற்று, தமிழர் வீர விளையாட்டு கலை அறக்கட்டளையின் பயில்வான் சின்னச்சாமி, ஆசான் கனகராஜ் பயில்வான் பயிற்சியாளர் சரவணகுமார், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். இதில் 19 தங்கம் 1 வெள்ளி பெற்று. ஒட்டுமொத்தமாக இரண்டாவது புள்ளிகளை பெற்று தமிழகத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

# டெங்குவுக்கு ஒரே டோஸ் தடுப்பூசி

## பிரேசிலின் சாதனை உலகுக்கு புதிய நம்பிக்கை

மழைக்காலம் வந்தால் அனைவருக்கும் பயத்தை ஏற்படுத்தும் நோய்களில் முக்கியமானது டெங்கு காய்ச்சல். ஏடிஸ் ஈஜிப்டி கொசுவால் பரவும் இந்த வைரஸ், லேசான காய்ச்சலிலிருந்து கடுமையான ரத்தக்கசிவு டெங்குவாக மாறி உயிரிழப்புகளுக்கும் வழிவகுக்கிறது. இதற்கான நிரந்தரத் தீர்வு கிடைக்காத நிலையில், உலகைக் கவர்ந்த மிகப்பெரிய மகிழ்ச்சி செய்தியை பிரேசில் வெளியிட்டுள்ளது.



பிரேசில், உலகிலேயே முதல் முறையாக ஒரே ஒரு டோஸ் போதுமான டெங்கு தடுப்பூசிக்கு அதிகாரப்பூர்வ அனுமதி அளித்துள்ளது. இனி இரண்டு டோஸ்கள் தேவையில்லை; ஒரே ஊசி போதுமானது, டெங்குவுக்கு எதிரான பாதுகாப்பு கிடைக்கும். இந்த புதிய தடுப்பூசியின் பெயர் புடாண்டான்-டிவி.

சாவோ பாலோவில் உள்ள புட்டான்டன் நிறுவனம் 8 ஆண்டுகள் ஆய்வுசெய்துஉருவாக்கிய இந்த தடுப்பூசிக்கு, பிரேசில் சுகாதார ஒழுங்குமுறை ஆணையமான அன்விசா அனுமதி வழங்கியுள்ளது. 12 முதல் 59 வயதுக்குட் பட்டவர்களுக்கு பயன்படுத் தவும் ஒப்புதல் கிடைத்துள்ளது.

புட்டான்டன் நிறுவன இயக்குனர் எஸ்பர் கல்லாஸ் கூறியதாவது:

"பிரேசிலின் அறிவியல் மற்றும் சுகாதார துறைக்கு இதுவரலாற்றுசாதனை. பல தசாப்தங்களாக நம்மைத் துன்புறுத்திய டெங்குவை தற்போது மிகவும் சக்திவாய்ந்த ஆயுதத்தால் எதிர்க்க முடிகிறது."

உலகில் தற்போது பயன்பாட்டில் இருந்த ஒரே டெங்கு தடுப்பூசி டேக்-003 ஆகும். இதற்கு 3 மாத இடைவெளியில் இரண்டு டோஸ்கள் அவசியம். ஆனால் புடாண்டான்-டிவி ஒரே டோஸில் செயல்படும் என்பதால், மருத்துவ சேவை மேலும் எளிதாகும்.

16,000 பேருக்கு மேல் செய்யப்பட்ட மருத்துவ சோதனையில், இந்த புதிய தடுப்பூசி கடுமையான டெங்குவுக்கு 91.6% பாதுகாப்பு வழங்குவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இது மருத்துவ உலகில் மிக உயர்ந்த செயல்திறனாக நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

டெங்கு அதிகரித்து வரும் முக்கிய காரணம் புவி வெப்பமயமாதல். கொசுக்களின் பரவல் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற பல நாடுகளுக்குப் பரவியுள்ளதால், தடுப்பூசி உருவாக்கம் உலகளவில் அவசரத் தேவை ஆனது.

# ரூ.1.17 கோடி விலை போன விஜபி கார் நம்பர்

ஹரியானாவில் கார் விஜபி (VIP) அல்லது ஃபேன்சி நம்பர் பிளேட்டுகளுக்கான ஆன்லைன் ஏலத்தில், இதுவரை இல்லாத வகையில் ஒரு நம்பர் பிளேட் சாதனை விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் நடைபெறும் இந்த ஏலத்தில், இந்த வாரம் 'HR88B8888' என்ற பதிவு எண்ணுக்கே அதிக ஏலப்போட்டி ஏற்பட்டது.




வெறும் ரூ.50,000 தான் அடிப்படை ஏலத் தொகை என நிர்ணயிக்கப் பட்டிருந்தாலும், இந்த எண்ணுக்காக மட்டும் 45 பேர் விண்ணப்பித்தனர். கடும் போட்டியின் காரணமாக, இந்த நம்பர் பிளேட்டின் விலை ரூ.1.17 கோடி என்ற அதிர்ச்சி அளிக்கும் அளவுக்கு உயர்ந்தது. இது ஹரியானாவில் இதுவரை அதிக விலைக்கு விற்கப்பட்ட நம்பர் பிளேட் என்ற புதிய சாதனையை உருவாக்கியுள்ளது.

HR88B8888 என்ற எண்ணின் மையக்கருத்து 'B' என்ற எழுத்தின் தோற்றத்தில் உள்ளது. ஆங்கில எழுத்து பெரிய எழுத்தில் 'B' பார்ப்பதற்குப் பெரும்பாலும் எண் 8 போலவே காட்சியளிக்கிறது. இதனால் இந்த நம்பர் பிளேட்டில் 8 என்ற எண் எட்டுமடங்கு தொடர்ச்சியாக வரும் தனிப்பட்ட தோற்றம் கிடைக்கிறது. இந்த தன்மையே வாங்குபவர்களுக்கு அதிர்ஷ்டம், செல்வம் மற்றும் பெருமை குறிக்கோளாக கருதப்படுவதால் விலை உயர்ந்தது.

கடந்த வாரமே HR22W2222 என்ற மற்றொரு ஃபேன்சி நம்பர் பிளேட் ரூ.37.91 லட்சத்திற்கு ஏலம் போனது. தற்போது ரூ.1.17 கோடிக்கு விற்கப்பட்டுள்ள HR88B8888 அந்த சாதனையை மிகத் தெளிவாக முறியடித்துள்ளது.

இந்த ஏலத்திற்கான விண்ணப்பங்கள் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி முதல் திங்கள்கிழமை காலை 9 மணி வரை பெறப்பட்டு, புதன்கிழமை மாலை 5 மணிக்கு முடிவுகள் அறிவிக்கப்படும் நடைமுறை பின்பற்றப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




கோவை சிறுதுளி அலுவலகத்தில் நடைபெற்ற நடிகர் ரோபோ சங்கர் மகள் இந்திரஜா சங்கர் துவங்கியுள்ள விளம்பர நிறுவனமான ரோபோ ஈவண்ட்ஸ் & எண்டர்டைமண்ட்ஸ் மற்றும் சாய் லோகபாலா பிரைவேட் லிமிட் இணைந்து சாய்நாத் மகாராஜ் கங்க ஆராத்தி எனும் பாடல் வெளியீட்டு விழாவில் சிறுதுளி நிர்வாக இயக்குநர் வனிதா மோகன் பாடலை வெளியிட்டார். உடன் சாய் லோகபாலா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பாலசரவணன்.


# திருமண வாழ்த்து

மணமகன்: D. வெங்கடேஷ், B.C.A., D.C.A.,
மணமகள்: S.ஸ்வேதா, MCA.,
முகூர்த்தம் நாள் : 01.12.2025, திங்கட்கிழமை
நேரம்: 6.00 am to 7.00 am
இடம் : அருள்மிகு ஸ்ரீ இரத்தின விநாயகர் கோவில்
ஆர்.எஸ்.புரம், கோவை.



வாழ்த்துபவர்கள் :
K.செல்வம் - S.பொன்னம்மாள், நியூஸ் பேப்பர் ஏஜன்ட்
D.B.ரோடு, கோவை. போன்: 98422 24723
D.கீதா தண்டபாணி
ஈரோடு, சூரம்பட்டி, பாரதிபுரம், போன்: 97916 06054
உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.


# 12 வயதிலேயே எழுத்துலகில் ஒளிரும் சிறுமி

செல்போன், லேப்டாப், கம்ப்யூட்டர் என கேமிங் உலகில் நேரத்தை செலவிடும் இன்றைய தலைமுறை குழந்தைகளுக்கிடையில், நூலகமும் புத்தகமும் தன் உலகாக அமைத்து முன்னேறிய சிறுமி புனிதம், வாசிப்பாளராக மட்டுமன்றி எழுத்தாளராகவும் திகழ்ந்து வருகிறார். இவரது திறமையையும் விழிப்புணர்வையும் கண்டு புகழ்பெற்ற விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை வியந்து பாராட்டியுள்ளார்.

கோவையைச் சேர்ந்த 12 வயது சிறுமி புனிதம் செந்தில்குமார், "ஒரு சிறுமியின் 17 கனவுகள்" என்ற தலைப்பில் தனது முதல் புத்தகத்தை எழுதி, வாசகர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகிறார். பல விருதுகள் அவரது அலமாரியை அலங்கரிக்கின்றன. நான்கு வயதில் எல்.கே.ஜி. படிப்பது தொடங்கிய நாளிலிருந்து பள்ளியில் கிடைத்த வண்ணமயமான புத்தகங்களே, அவர் புத்தக உலகிற்குள் பயணிக்க காரணமாக அமைந்தன.

பாடநூல்களில் இருந்த ஆர்வம் பிற நூல்களுக்கும் தாழ்ச்சி அடையாமல், உலக வரலாறு,




உண்மை சம்பவங்கள், கற்பனை கதைகள் என பல்வேறு பிரிவுகளில் 500-க்கும் மேற்பட்ட புத்தகங்களை அவர் வாசித்துள்ளார். புத்தக வாசிப்பினால் தனது கற்பனை வளமும் சிந்தனைத் திறனும் உயர்ந்ததாக புனிதம் தெரிவிக்கிறார். "புத்தகம் அறிவைக் கூர்மைப்படுத்தும் ஆயுதம். அதுதான் என் சிறந்த நண்பன்" என்கிறார் அவர்.

இந்தப் புத்தகத்தை மயில்சாமி அண்ணாதுரை வெளியிட்டு, மிகுந்த பாராட்டுகளை தெரிவித்துள்ளார். "வளர்கின்ற குழந்தைகள் இந்தக் கருத்துக்களைப் பின்பற்றினால், 2045-க்குள் ஐ.நா. இலக்குகள் நிச்சயம் நிறைவேறும்" என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார் சிறுமி புனிதம்.

சிறுவயது முதலே கதை கேட்கவும் சொல்லவும் ஆர்வம் கொண்ட புனிதம், கற்பனை வளத்தில் சிறந்தவள் என அவரது பெற்றோர் தெரிவிக்கின்றனர். தந்தை செந்தில்குமார், தாய் அம்சலீலா ஆகியோர், புனிதத்தின் வாசிப்பு பற்றையை அறிந்து, நூல்களுக்கான சரியான வழியை அமைத்துள்ளனர். "புத்தக வாசிப்பு எங்கள் குழந்தையை பக்குவமான சிந்தனையுடன் வளர்த்தது; ஒரு விஷயத்தை எவ்வாறு திறம்பட கையாள வேண்டும் என்பதை நூல்கள் கற்றுத்தந்தன" எனக் கூறுகின்றனர் அவர்கள்.

நவீன தொழில்நுட்ப யுகத்தில் சிறார்கள் கேட்ஜெட்டுகளில் மற்றும் கேமிங்கில் அதிக நேரம் செலவிடும் சூழலில், 12 வயதில் ஒரு சிறுமி இவ்வளவு புத்தகங்களை வாசித்து, சமூகப் பொறுப்புடன் புத்தகம் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது. புதிய தலைமுறைக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக புனிதம் திகழ்கிறார்.

# ஆதார் மொபைல் எண் மாற்றம் எளிதாக செய்ய யுஐடிஏஐ புதிய வசதி அறிமுகம் படுத்தியுள்ளது

ஆதார் அட்டையில் முகவரி உள்ளிட்ட விவரங்களை ஆன்லைனில் எளிதாக மாற்ற முடிந்தாலும், மொபைல் எண்ணை மாற்றுவதற்காக ஆதார் மையங்களில் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை பலரையும் அவதிப்படுத்தி வந்தது. இந்த சிரமத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

யுஐடிஏஐ விரைவில் அறிமுகப்படுத்தும் புதிய வசதியின் மூலம், பயனர்கள் வீட்டிலிருந்தபடியே, ஸ்மார்ட்போன் மூலம், ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்ட மொபைல் எண்ணை மாற்றிக்கொள்ள முடியும். இதற்கு இனி ஆதார் சேவை மையங்களுக்கு நேரில் செல்வதோ, படிவங்கள் நிரப்புவதோ, நீண்ட வரிசையில் காத்திருப்பதோ தேவையில்லை என யுஐடிஏஐ அதிகாரப்பூர்வமாக எக்ஸ் (ட்விட்டர்) தளத்தில் தெரிவித்துள்ளது.

இந்த புதிய வசதி மிகவும் பாதுகாப்பாக வடிவமைக்கப்பட்டதாக UIDAI குறிப்பிட்டுள்ளது. இரண்டு கட்டச் சரிபார்ப்பு நடைமுறையைக்கொண்டு செயல்படும் இந்த முறைப்பாட்டில்:

புதிய மொபைல் எண் அல்லது இணைக்கப்பட்ட எண்ணுக்கு ஓடிபி அனுப்பப்படும். ஓடிபி சரிபார்ப்புக்குப்பின், ஆதார் செயலியில் உள்ள Face Authentication வசதி மூலம் பயனரின் முகம் ஸ்கேன் செய்து அடையாளம் உறுதிப்படுத்தப்படும்.

இந்த டிஜிட்டல் முறையில் எந்த ஆவணங்களும் சமர்ப்பிக்கத் தேவையில்லை. இது குறிப்பாக முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், கிராமப்புற மக்கள் போன்றோருக்கு பெரும் நிவாரணமாக இருக்கும். இதுவரை மொபைல் எண் மாற்றத்திற்காக அடையாளச் சரிபார்ப்பு காரணமாக கட்டாயம் மையங்களை நேரில் செல்வதுதான் வழக்கம். ஆனால், இந்த புதிய பிட்ஜிட்டல் முறையால் அந்த சிரமம் நீங்கவிருக்கிறது.

இந்த புதிய வசதி இன்னும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வராத நிலையில், மிக விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று UIDAI அறிவித்துள்ளது. பயனர்கள் முன்கூட்டியே ஆண்ட்ராய்டு அல்லது ஐபோன் மொபைல்களில் அதிகாரப்பூர்வ ஆதார் செயலியை பதிவிறக்கம் செய்து வைத்துக்கொள்ளுமாறு யுஐடிஏஐ பரிந்துரைத்துள்ளது.

# இறையன்பின் இலக்கியம்: நாவுக்கரசர் வாழ்க்கை ஓவியம்



நாவுக்கரசர் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாரூரில் பிறந்தார்.

தந்தை புகழனார், தாயார் மாதினியார். அவருக்கு திலகவதியார் என்ற அக்காள் இருந்தார். திருநாவுக்கரசரின் பெற்றோர் வைத்த பெயர் மருள்நீக்கியார். திலகவதியாருக்குத் திருமணபருவம் வந்தபோது, கலிப்பகையாருடன் திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் கலிப்பகையார் போர் சென்று வாதாபியில் உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து திலகவதியாரின் பெற்றோரும் மனவேதனையால் உயிர் நீத்தனர். மருள்நீக்கியார் தனிமையில் வாழவேண்டிய நிலையில், அக்காள் உடன் வாழ்ந்ததையும், கட்டை ஏறுதல் போன்ற சடங்குகளை நிறுத்தினார்.

அக்காளின் பாசத்தால் வளர்ந்த அவர் கல்வியில் சிறந்து, பாடலிபுரத்துச் சென்று சமண நூல்களை கற்றார். அதனால் சமண சமயத்தைத் தழுவினார். தம்பியார் சமண மதத்தை ஏற்றுக்கொண்டதைக்கண்டு திலகவதியார் துயரத்தில் மூழ்கி சிவபெருமானை வேண்டினார். அத்துயரை அறிந்த சிவபெருமான் மருள்நீக்கியாருக்கு கடுமையான வயிற்று நோயை ஏற்படுத்தினார். துன்பத்தில் தவித்த அவர் திலகவதியாரின் துணையுடன் திருநீறு அணிந்து, வீரட்டானேசுவரரை சரணடைந்தார். அப்போது "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனும் பதிகத்தை உருக்கமாகப் பாடினார். உடனே நோய் நீங்கியது. அசரீரி தோன்றி, "செந்தமிழால் வளம்பெற்ற பதிகம் பாடியதனால் இனி நீ 'நாவுக்கரசர்' எனப் போற்றப்படுவாய்" என அருளியது. இதனைத் தொடர்ந்து திருநாவுக்கரசர் ஊர்தோறும் சென்று சைவத்தைப் பரப்பினார்.

இவற்றை அறிந்த பாடலிபுத்திரச் சமணர்கள், அரசர் மகேந்திர வர்மனிடம் போய், நாவுக்கரசர் சமணத்தை இகழ்ந்து சைவத்தை வளர்த்துவருகிறார் என்று புகார் தெரிவித்தனர். அரசன் அவரைப் பிடிக்க ஆணையிட்டான். அழைத்துச்செல்லும்போது நாவுக்கரசர் "நாமார்க்கும் குடியல்லோம்" எனும் திருத்தாண்டகத்தைப் பாடினார். பின்னர் அரசனைச் சந்தித்தார். சமணர்களின் தூண்டுதலால் நாவுக்கரசரை நீற்றறையில் அடைத்தனர். அங்கே அவர் "மாசில் வீணையும்" பதிகத்தைப் பாடினார். பல நாட்கள் கழித்தும் அவர் பாதிப்பில்லாமல் இருந்தார்.

பின்னர் அவருக்கு நஞ்சு கலந்து உணவு அளித்தனர். அது அமுதமாயிற்று. யானையால் மிதிக்க அரசன் உத்தரவிட்டார். அப்பொழுது "சுண்ண வெண் சந்தனச் சாந்தும்" பதிகத்தைப் பாடினார். யானை அவரை வணங்கி விலகியது. கடைசியாக கல்லுடன் கட்டி கடலில் வீசினர். அப்பொழுது அவர் "நல்துணையாவது நமச்சிவாயமே" எனப் பாடினார். கல் தாங்கியதுபோல் மிதந்து திருப்பாதிரிப் புலியூரை வந்து சேர்ந்தார்.

இந்த அதிசயங்களைப் பார்த்த மகேந்திர பல்லவன் சைவ சமயமே உண்மையானது என்பதை உணர்ந்து, நாவுக்கரசரிடம் மனம் மாறினார். பின்னர் நாவுக்கரசர் சீக்காழி சென்று ஞானசம்பந்தரைச் சந்தித்தார். இளைஞர் சம்பந்தர் அவரைக் கண்டதும் "அப்பரே" என அழைத்தார். அப்போதிலிருந்து மருள்நீக்கியார் நாவுக்கரசர், அப்பர் எனப் பரவலாகப் போற்றப்பட்டார்.

அப்பூதியடிகள் நாவுக்கரசரை முதன்மையாகப் போற்றியவர். அவருடைய மகன் பாம்புக் கடியால் இறந்தபோது, நாவுக்கரசர் "ஒன்று கொலாம்" என்ற விடம் தீர்த்தப் பதிகத்தைப் பாடி, பிள்ளையை உயிர்ப்பித்தார்.

அப்பரும் சம்பந்தரும் இணைந்து பல தலங்களைக் கண்டனர். திருவீழிமிழலையில் கொடிய பஞ்சம் நிலவியபோது, இறைவன் பொற்காசுகள் வழங்கினார். திருமறைக்காடு சென்றபோது கோயில் கதவு மூடப்பட்டிருந்தது. சம்பந்தர் வேண்டுகோளின் பேரில் அப்பர் "பண்ணின் நேர்மொழியால்" பாடி கதவைத் திறந்தார்.

பின்னர் கயிலையில் சென்று சிவபெருமானின் அருளைப் பெற்றார். ஒரு பொய்கையில் மூழ்கும்படி சிவபெருமான் ஆணையிட்டார். மூழ்கிய அப்பர் திருவையாற்றில் வெளிவந்து சிவசக்தி இரண்டையும் ஆனந்தத்தில் கண்டார். இறுதியில் திருப்பூந்துருத்தியில் சைவ திருமடம் அமைத்து அதில் தங்கினார்.

தாண்டகப் பாடலில் சிறந்து விளங்கியதால் தாண்டகவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார். அப்பரடிகள் தம் 81வது வயதில் திருப்புகலூரில் இறையடி சேர்ந்தார்.


# Thamarai International School

Towards Excellence
A Residential & Day Boarding CBSE School
Thanjavur & Kumbakonam

## Our performance - NEET 2025

Bounteous Congratulations !



Top Performer
168 AIR
1 Theepak S 635 / 720
2 Sevitha A 609 / 720
3 Tarun K 600 / 720

Diresh Kumar M 573
Sadhana T 572
Hayagreevan B 567
Samika T 566
Mitoun N 559
Tharane Tharan G A 554
Adhiyan Thangamani 541
Ankita P 536
Lakshan S 536
Sri Aadhi Varshini K 536
Pon Sornesh K 533
Noel Bala Yugan L 533
Kevin Prakash A 529
Vivarthani V P 527
Hamsika M 526
Shangavi D M 525
Dhayanithi T 521
Praveen kumar S 521
Pragathi B G S 516
Akash Varshan J 516
Hiba Naaz M 514
Naren K 513
Hema Pradeeksha P 512
Dharshini B 509
Sree W Sudhan K 505
Ashwin R 501
Abinaya S 499
Valentina Matharasi A 496
Nikilasree S V 494
Kavinaya S 493
Suman K S 492
Delan Marya A 486
Amithran P K 486
Harini P 485
Kavi Bharathi R 483
Amritha L 481
Mahathi J 479
Harikrishnan B 477
Devulapalli Sai Tripura Sanjana 476
Kamalesh D 475
Kawin M 473
Patrick I L 471

| TIS NEET ANALYSIS | | | | | |
|---|---|---|---|---|---|
| Above | 600 | 550 | 500 | 450 | 400 |
| No. of Students | 03 | 09 | 29 | 61 | 100 |

ADMISSIONS OPEN FOR NEET REPEATERS' COURSE - 2026

THANJAVUR : 04362 - 253360 /62 / 64,7806812920 / 22 KUMBAKONAM : 0435 - 3500300 / 301 , 8012597427 / 29

Hostel facilities available

# சி.பி.எஸ்.இ., 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு இனி 7 பாடங்கள்

மத்திய இடைநிலை கல்விவாரியம் (சிபிஎஸ்சி), மத்தியஅரசின்புதியதேசிய கல்விக் கொள்கையை பின்பற்றி செயல்பட்டு வருகிறது. இணைப்பு பள்ளிகளுக்கான விதிமுறைகளும், கல்வி நடைமுறைகளும், மத்திய கல்வி அமைச்சகத்தின் ஆலோசனையின்படி அவ்வப்போது மாற்றப்படுகின்றன.

பாடப்புத்தகங்கள் தொடர்பாக, சிபிஎஸ்சி-க்கு தேவையான அனைத்து புத்தகங்களையும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலான என்சிஇஆர்டி வழங்கி வருகிறது. இதன் மூலம் ஒருங்கிணைந்தகல்வித்தரம் நிலைநிறுத்தப்படுகிறது.

புதிய கல்விக் கொள்கையின் படி, இந்த ஆண்டு முதல் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை தேர்ச்சிதோல்வி முறை ரத்து செய்யப்பட்டுள்ளது. அதேசமயம், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை ஆண்டுக்கு இரண்டு முறை எழுதும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அடுத்த கல்வியாண்டு முதல் பாடத்திட்டத்தில் முக்கிய மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இதுவரை மாணவர்கள் படித்து வந்த ஆங்கிலம், ஹிந்தி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல் என ஐந்து முதன்மை பாடங்களுடன் மேலும் இரண்டு புதிய பாடங்கள் சேர்க்கப்படுகின்றன.

மாணவர்கள் இப்போது, ஆங்கிலம் மற்றும் ஹிந்தியுடன் கூடுதலாக ஒரு இந்திய மொழிப் பாடத்தையும் கட்டாயம் படிக்க வேண்டும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி போன்ற எந்த இந்திய மொழியையும் பள்ளிகள் வழங்கலாம்.

மேலும், தொழில் மற்றும் திறன் சார்ந்த ஒரு பாடத்தை மாணவர்கள் தேர்வு செய்ய வேண்டும். கணக்கீட்டு சிந்தனை, உடற்கல்வி மற்றும் நலவாழ்வு, கலைக் கல்வி, சுற்றுச்சூழல், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம், சில்லரை விற்பனை, சந்தைப்படுத்துதல், நிதிசார் கல்வி போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்யலாம்.

இந்த மாற்றங்கள் அனைத்தும் மாணவர்களின் பல்துறை திறமைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டதாக சிபிஎஸ்சி தெரிவித்துள்ளது.

# கோவை மெட்ரோ திட்டம்; அதிமுக மாமன்ற குழு தலைவர் பகீர் குற்றச்சாட்டு

மெட்ரோ ரயில் திட்டம் அதிமுக கொண்டுவந்த திட்டம் என்பதால் வேண்டுமென்றே தவறான திட்ட அறிக்கை தயாரித்து கோவையை திமுக அரசு வஞ்சித்து விட்டது என்று அதிமுக மாமன்ற குழு தலைவர் பிரபாகரன் குற்றம் சாட்டியுள்ளார்

கோவை மாமன்ற கூட்டத்தின் போது, திமுக அரசை கண்டித்து அதிமுகவினர் வெளிநடப்பு செய்தனர். இந்த கூட்டத்துக்கு வந்த அதிமுக மாமன்ற குழு தலைவர் பிரபாகரன் மற்றும் அதிமுக மாமன்ற உறுப்பினர் ரமேஷ் ஆகியோர். கோவைக்கு வரவேண்டிய மெட்ரோ இரயில் திட்டத்தை சதிசெய்து முடக்கியதாக கூறி, திமுகவிற்கு எதிராக பதாகைகளுடன் வந்திருந்தனர். திமுக அரசிற்க்கு எதிராக கோசங்களை எழுப்பி தரையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய பிரபாகரன் கூறியதாவது, ''கோவை மாவட்டத்திற்கு மெட்ரோ இரயில் திட்டத்திற்காக அதிமுக ஆட்சியில் கழக பொதுச்செயலாளர் எடப்பாடியார் ஜப்பான் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டார். சுமார் 3 கோடி ரூபாய் முதற்கட்ட பணிகளுக்கு ஒதுக்கினார். ஆனால், ஆட்சி மாற்றத்திற்கு பிறகு கோவை நகரை புறக்கணிக்கும் விதமாக திமுக அரசு அதை முடக்கி விட்டது. தற்பொழுது மெட்ரோ திட்ட அறிக்கையை தவறுதலாக தயார் செய்து அனுபப்பட்டதால் மத்திய அரசு திருப்பி அனுப்பியுள்ளது'' என்றார்.

# அடடே நல்ல ஐடியாவாக உள்ளதே... நெட்டிசன்கள் பாராட்டும் பஸ்



கேரள மாநிலத்தில் ஏராளமான தனியார் பஸ்கள் ஓடுகின்றன. இந்த பேருந்துகள் அதிவேகத்துக்கும் விபத்துகளுக்கும் பெயர் பெற்றவை. இவற்றில், பயணிக்கும் பயணிகள் ஒருவிதப்பதற்றத்துடன்தான் பயணிக்க வேண்டும். காரணம்.. சிங்கிள் ரோட்டில் இந்தப்பேருந்துகள் மின்னல் வேகத்தில் பயணிக்கும்.

தாறுமாறாகத் திரும்பும். இதனால், அடிக்கடி விபத்துகளில் சிக்குவதும் உண்டு. தனியார் பேருந்துகளின் வேகத்துக்குக் கடிவாளம் போட அரசு முயன்றாலும் பலன் அளிப்பதில்லை.

தற்போது ஒரு கேரள தனியார் பஸ் பற்றி நல்லவிதமாக மீடியாக்களில் செய்தி அடிபடுகிறது.

இந்த பஸ்சின் பெயர் எல்சம்மா. இந்தப்பேருந்து சேர்தலாவில் இருந்து ஆலப்புழா வரை செல்கிறது.

கடற்கரையைஒட்டியுள்ளவளைவுகள் நிறைந்த சாலையில் இந்தப் பேருந்து பயணிக்கும். இந்தப் பேருந்தில் இரு ஸ்டீயரிங்குகள் உள்ளன. இதுதான், மீடியாக்களில் இந்தப்பேருந்தின் பெயர் அடிபடக் காரணமாக அமைந்துள்ளது. அதாவது வலதுபுறத்திலுள்ள ஸ்டீயரிங் டிரைவருக்கானது. இடது புறத்திலுள்ள டம்மி ஸ்டீயரிங் குழந்தைகளுக்கானது.

இந்தப் பேருந்தில் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் அதிகமாக பயணித்து வந்துள்ளனர்.

பேருந்துப் பயணத்தின் போது பல குழந்தைகள் வாந்தி எடுப்பதை வாடிக்கையாக வைத்திருந்துள்ளனர். இதையடுத்துபேருந்துஉரிமையாளரான டி.ஜே. டிசௌசாவிடம், நண்பர் ஒருவர், பேருந்தில் குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கும்படி பொம்மைகளை வைக்கக் கூறியுள்ளார்.

இதையடுத்து பலரிடமும் ஆலோசித்த பேருந்து உரிமையாளர் இடது புறத்தில் மற்றொரு டம்மி ஸ்டீயரிங்கை பொருத்தினார்.

இந்த ஸ்டீயரிங்குக்கும் பேருந்து இயக்கத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. ஆனால், குழந்தைகள் பேருந்து ஓடும் போது, இந்த ஸ்டீயரிங்கை சுற்றிக் கொண்டு தாங்களும் பேருந்து ஓட்டுவதாக நினைத்துக் கொள்கின்றனர். அதோடு, இந்த பேருந்தில் உற்சாகமாகவும் பயணிக்கின்றனராம்.

குழந்தைகளின் கவனம் பஸ்சில் ஏறியதும் பொம்மை ஸ்டீயரிங் மீது சென்றுவிடுவதால், வாந்தி எடுப்பதை பற்றி அவர்கள் மறந்து விடுகின்றனர். இப்போது இந்தப் பேருந்தில் செல்லும் குழந்தைகள் வாந்தி எடுப்பது பெரும்பாலும் குறைந்துள்ளதாம். இந்தப் பேருந்தின் உரிமையாளரான டிசௌசா அடிப்படையில் ஏசி மற்றும் வாசிங்மெஷின் மெக்கானிக் ஆவார். பின்னர், இந்த வேலையை விட்டுவிட்டு, பஸ் டிரைவரானார். தொடர்ந்து, கடுமையான உழைப்பினால், சொந்தமாக பஸ் வாங்கியுள்ளார். தற்போது, எல்சம்மா பஸ் கேரளா முழுவதும் பாப்புலராகி விட்டது. குழந்தைகள் பொம்மை ஸ்டீயரிங்கை சுற்றும் வீடியோவும் இணையத்தில் பரவி வருகிறது. அடடே... இதுவும் நல்ல ஐடியாவாக உள்ளதே என்று நெட்டிசன்களும் பாரட்டி வருகின்றனர்.

# சவுதி அரேபியாவில் மேலும் இரு நகரங்களில் மதுக்கடை

சவுதி அரேபியாவில் கடந்த 1952ம் ஆண்டு மதுவுக்கு முற்றிலும் தடைவிதிக்கப்பட்டது. அந்த நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் தங்களுக்காக மதுக்கடைகளை திறக்க வேண்டுமென நீண்ட நாள் கோரி வந்தனர். இதையடுத்து, கடந்த ஆண்டு ரியாத்தில் முதன்முறையாக மது பார் திறக்கப்பட்டது. இந்தபாரில், இஸ்லாமியர்கள் அல்லாத வெளிநாட்டுக்காரர்கள் மட்டுமே மது அருந்த முடியும். அதுவும், உயர் சம்பளம் வாங்கும் வெளிநாட்டவர்களுக்கு மட்டுமே அனுமதியும் வழங்கப்பட்டது. வெளிநாட்டு இன்வெஸ்டர்ஸ், தொழில்முனைவோர்கள் இங்கு மது அருந்த முடியும்.

இந்த நிலையில், உலகிலேயே மிகப் பெரிய எண்ணெய் நிறுவனமான அராம்கோ, தங்களின் வெளிநாட்டு ஊழியர்களுக்காக மதுபார் திறக்க வேண்டுமென நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தது. இதையடுத்து, சவுதி இளவரசர் முகமது பின் சல்மானின் உத்தரவின் பேரில், அராம்கோ நிறுவனத்தின் தலைமையகம் அமைந்துள்ள டகரான் நகரில் புதிய மது பார் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தில் பணி புரியும் முஸ்லிம்கள் அல்லாத வெளிநாட்டவர் மது அருந்த அனுமதிக்கப் படுவார்கள்.

அதேபோல, தலைநகர் ரியாத்துக்கு அடுத்ததாக சவுதி அரேபியாவின் முக்கிய துறைமுக நகரம் ஜெட்டா. இந்த நகரில் ஏராளமான வெளிநாட்டுத் தூதரக அலுவலகங்கள் அமைந்துள்ளன. எனவே ஜெட்டாவிலும் மதுபார் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்திருந்தது. தொடர்ந்து, ஜெட்டாவிலும் மதுபாரை திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

வரும் 2026ம் ஆண்டு இந்த இரு நகரங்களிலும் மது பார் செயல்பட தொடங்கும். இது குறித்து, அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகவில்லை. ஆனால் ராய்ட்டர்ஸ் நிறுவனம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

2034ம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து தொடரின் போது, லட்சக்கணக்கான ரசிகர்கள் சவுதி அரேபியாவுக்கு வருவார்கள். அந்த ரசிகர்களுக்கும் மது விற்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது. கடந்த 2017ம் ஆண்டுதான் சவுதி அரேபியாவில் முதன்முறையாக பெண்கள் கார் ஓட்ட அனுமதிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# எலிக்கு தலையாக இருக்க விரும்பவில்லை: ஜெயக்குமார் நக்கல்



அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நேற்று தவெகவில் இணைந்தார். அதன்பின்னர், செங்கோட்டையனை அடுத்து ஜெயக்குமாரா? என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இதற்கு ஜெயக்குமார் செய்தியாளர்களை சந்தித்து விளக்கம் கொடுத்துள்ளார்.

செங்கோட்டையன் தவெகவில் இணைந்தது குறித்து கேள்விக்கு, 'நான் பெரிதும் மதிக்கூடியவர் அண்ணன் செங்கோட்டையன். அவர் ஒருமுடிவுஎடுத்துதவெகவில் இணைந்திருக்கிறார். எங்கிருந்தாலும் வாழ்க. இதைத்தான் நான் சொல்ல முடியும். அவர் தவெகவில் இணைந்ததுமே செங்கோட்டையனை அடுத்து ஜெயக்குமாரும் போகிறார் என்று தகவல் பரப்புகிறார்கள். நடக்காது கண்ணா நடக்காது. எவ்வளவு வேண்டுமானாலும் கை வலிக்க எழுதிக்கொள்ளுங்கள்'' என்றார்.

தொடர்ந்து பேசிய ஜெயக்குமார், ''என்னைப்பொறுத்தவரையிலும் ஒரே கட்சிதான். நேற்று இன்று நாளை. எனது இறுதிக்காலம் வரை அதிமுகவில்தான் இருப்பேன். செத்தாலும் இறுதிச்சடங்கில் அதிமுக கொடியோடுதான் போவேனே தவிர, யார் வீட்டு வாசலிலும் போய் நின்று கதவை தட்டமாட்டேன்.

புலிக்கு வாலாக இருப்பதில் எனக்கு சம்மதம். ஆனால் எலிக்கு தலையாக இருக்க விருப்பமில்லை. எலிக்கு தலையாக இருந்தாலும் எந்த பிரயோசனமும் இருக்கக்கப்போவதில்லை. புலி என்பது அதிமுக. அடுத்து எலி என்றால் எந்த கட்சி என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.'

சபாநாயகர், நிதி அமைச்சர், 15க்கும் மேற்பட துறைகள், கட்சியில் பல பொறுப்புகள். இதெல்லாம் எவ்வளவு பெருமைகள். இத்தனையும் அதிமுகவில் எனக்கு கிடைத்திருக்கிறது. அதனால் காலம் முழுவதும் புரட்சித்தலைவர் புகழ்பாடுவேன்''என்றார்.

# பிரிட்டனை விட்டு வெளியேறுகிறார் தொழிலதிபர் லட்சுமி மிட்டல்: அதிக வரிவிதிப்பு திட்டத்தால் முடிவு



பெரும் பணக்காரர்களுக்கு அதிக வரி விதிக்க, பிரிட்டன் முடிவு செய்துள்ளதால், அந்நாட்டை விட்டு வெளியேற இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும், உலக புகழ்பெற்ற உருக்கு ஆலை தொழிலதிபருமான லட்சுமி மிட்டல் முடிவு செய்துள்ளார்.

ராஜஸ்தானில் பிறந்தவர் தொழிலதிபர் லட்சுமி மிட்டல், 75. இவர் வெளிநாடுகளில் உருக்கு ஆலைகளை துவங்கினார். கடந்த, 1980களின் இறுதியில் ஐரோப்பிய நாடான பிரிட்டன் தலைநகர் லண்டன் சென்று செட்டில் ஆனார். அங்கிருந்தபடி தன் உருக்கு ஆலை தொழிலை கவனித்து வந்தார். அவரது 'ஆர்சிலோர் மிட்டல்' உருக்கு ஆலை தற்போது 60க்கும் மேற்பட்ட நாடுகளில் இயங்கி வருகிறது. இவரது நிறுவனத்தின் தற்போதைய சந்தை மதிப்பு 1.20 லட்சம் கோடி ரூபாய். இவர், பிரிட்டனின் எட்டாவது பெரிய பணக்காரராக உள்ளார். தற்போது மற்றொரு ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தில் வசிக்கிறார்.

இந்நிலையில், பிரிட்டன் அரசு கடந்த ஆண்டு தொழிலதிபர்களுக்கு பல்வேறு வரிகளை உயர்த்தியது. புதிய வரிகளை விதித்தது. குடும்ப தொழிலை வாரிசுகளுக்கு கைமாற்றினால் அதற்கு வாரிசு வரியை அறிமுகப்படுத்தியது. இதனால் பெரும் தொழிலதிபர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். மேலும் வரும் 26ம் தேதி தாக்கல் செய்ய உள்ள பட்ஜெட்டில் பிரிட்டனை விட்டு வெளியேறும் தொழிலதிபர்களுக்கு 20 சதவீத வெளியேறும் வரி விதிக்க நிதி அமைச்சர் ரேச்சல் ரீவ்ஸ் திட்டமிட்டுள்ளதாக செய்தி வெளியானது.

இதனால் இந்திய வம்சாவளி தொழிலதிபர் லட்சுமி மிட்டல் மேற்கு ஆசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாய்க்கு இடம்பெயர உள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. அங்கு வாரிசு வரி கிடையாது. லட்சுமி மிட்டலுக்கு துபாயில் ஏற்கனவே சொத்துக்கள் உள்ளன.

# 100 கோடிக்கு ஏலம் போன அமெரிக்கா



நியூயார்க்கில் நடந்த ஏலத்தில், 18 காரட் தங்கத்தால் செய்யப்பட்ட டாய்லெட் 100 கோடி மதிப்புக்கு ஏலம் போனது.

பிரபல இத்தாலிய கலைஞர் மௌரிசியோ கேடலான் என்பவரால் இந்த தங்க டாய்லெட் உருவாக்கப்பட்டது. இந்த டாய்லெட் தங்க முலாம் பூசப்பட்டது அல்ல. சுமார் 101 கிலோ எடையுள்ள, 18 காரட் திட தங்கத்தால் ஆனது. அதுமட்டுமில்லாமல் இது ஒரு சாதாரண டாய்லெட் போலவே பயன்படுத்த முடியும்.

நியூயார்க்கில் உள்ள சோதபி ஏல மையத்தில் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் கடந்த நவம்பர் 18ம் தேதி இந்த டாய்லெட் ஏலம் விடப்பட்டது. இதனை 'ரிப்லீஸ் பிலீவ் இட் ஆர் நாட்' என்ற புகழ்பெற்ற நிறுவனம் 100 கோடிக்கு வாங்கியுள்ளது. இந்த டாய்லெட்டின் பெயர் 'அமெரிக்கா ' என்பதாகும். அடிப்படை விலை 88 கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. விசித்திரமான பொருட்களை சேகரிக்கும் இந்த அருங்காட்சியகம், இந்த தங்க டாய்லெட்டை தங்களது சேகரிப்பிலேயே மதிப்புமிக்கதாக கூறியுள்ளது.

இந்த மாதிரி டாய்லெட்டுகள் உலகில் இரண்டுமட்டுமே தயாரிக்கப்பட்டன. கடந்த 2019ம் ஆண்டு இங்கிலாந்தின் பிளென் ஹேம் அரண்மனையில் ஒன்று பொருத்தப்பட்டது.

இது, இங்கிலாந்தின் மிகப் பெரிய அரண்மனைகளில் ஒன்று. ஒரு முறை கண்காட்சியில் வைக்கப்பட்ட போது, இந்த தங்க டாய்லெட்டை இரு திருடர்கள் கொள்ளையடித்தும் சென்று விட்டனர்.

பின்னர், அதை உருக்கி விட்டதாக கூறப்படுகிறது. இந்த வழக்கில் இருவர் கைது செய்யப்பட்டு 4 ஆண்டுகள் 3 மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எஞ்சியிருந்த ஒன்றை நியுயார்க் மெட்ஸ் தலைவர் ஸ்டீவ் கோகென் வைத்திருந்தார். இவரிடத்தில் இருந்து 'ரிப்லீஸ் பிலீவ் இட் ஆர் நாட்' நிறுவனம் வாங்கியுள்ளது.

இது கடைசியாக 2016ம் ஆண்டு நியூயார்க் நகரிலுள்ள குகன்ஹைய்ம் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. அப்போது, சுமார் 1 லட்சம் பேர் இந்த தங்க டாய்லெட்டை பயன்படுத்தும் வாய்ப்பை பெற்றனர்.

'ரிப்லீஸ் பிலீவ் இட் ஆர் நாட்' நிறுவனம் இந்த தங்க டாய்லெட்டை என்ன செய்வது என்பது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை. ஆனால், மக்கள் பயன்படுத்த அனுமதிப்பதில்லை. பார்வைக்கு மட்டும் வைக்க முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

# தோனி வீட்டில் இந்திய வீரர்களுக்கு விருந்து

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் தென்னாப்பிரிக்க அணி 2 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள், 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

டெஸ்ட் போட்டிகள் முடிவடைந்திருக்கும் நிலையில், இரண்டிலுமே தென்னாப்ரிக்கா அணி வெற்றி பெற்றது . இதனைத் தொடர்ந்து மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெற இருக்கும் நிலையில் முதல் போட்டி நவம்பர் 30ஆம் தேதி ராஞ்சியில் தொடங்க இருக்கிறது. இந்நிலையில் போட்டிக்கு ராஞ்சி சென்றிருக்கும் விராட் கோலி, ரிஷப் பந்த், ருத்துராஜ் கெயிக்வாட் ஆகியோர் இந்திய அணியின் முன்னாள் கேப்டன் தோனியின் வீட்டிற்கு விருந்துக்கு சென்றிருக்கின்றனர். விருந்துக்குப் பிறகு தோனி, கோலியை காரில் ஹோட்டலுக்கு சென்ற காட்சிதான் சமூக வலைதளங்களில் வைரலானது.

# டிசம்பர் 2, 3-ல் கோவை மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டிகள்

கோவையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டிகள் டிசம்பர் 2, 3 ஆம் தேதிகளில் நடைபெற உள்ளன. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் பவன் குமார் கி. கிரியப்பனவர் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக பாடுபட்ட தலைவர்களின் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில், அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித் துறை ஆண்டுதோறும் பேச்சுப் போட்டிகளை நடத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக அக்டோபர் 2ஆம் தேதி காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் நவம்பர் 14ஆம் தேதி ஜவஹர்லால் நேரு பிறந்த நாளையொட்டி, இவ்வாண்டும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

டிசம்பர் 2 ஆம் தேதி பள்ளி மாணவர்களுக்கு 'காந்தியடிகளின் வாழ்க்கை சுவடுகள்', 'வாய்மையே வெல்லும்', 'தீண்டாமையும் காந்தியடிகளும்' என்ற தலைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதே நாளில் கல்லூரி மாணவர்களுக்கு 'வாழ்விக்க வந்த எம்மான்', 'அண்ணல் காந்தியடிகளின் அரசியல் வேள்வி', 'தில்லையாடி வள்ளியம்மையும் காந்தியடிகளும்' என்ற தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

அதனைத் தொடர்ந்து, டிசம்பர் 3 ஆம் தேதி பள்ளி மாணவர்களுக்கு 'ஜவஹர்லால் நேருவின் சாதனைகள்', 'விடுதலைப் போரில் நேருவின் பங்களிப்பு', 'அமைதிப்புறா நேரு' என்ற தலைப்புகளிலும், கல்லூரி மாணவர்களுக்கு 'நவீன இந்தியாவின் சிற்பி', 'நேரு பதித்த சுவடுகள்', 'நேருவின் வெளியுறவுக் கொள்கை' என்ற தலைப்புகளிலும் பேச்சுப் போட்டிகள் நடைபெறும். இந்தப் போட்டிகள் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பழைய கட்டடத்தின் இரண்டாம் தளத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெறும்.

போட்டியில் பங்கேற்க, பள்ளி மாணவர்களின் பெயர்கள் முதன்மை கல்வி அலுவலர் வழியாகவும், கல்லூரி மாணவர்களின் பெயர் பட்டியல் கல்லூரி முதல்வர்கள் மூலம் தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் அலுவலகத்துக்கு நேரிலோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ டிசம்பர் 1 ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி காலை 9.30 மணிக்கும், கல்லூரி மாணவர்களுக்கான போட்டி பிற்பகல் 2.30 மணிக்கும் தொடங்கும். போட்டியில் முதலிடம், இரண்டாம் இடம், மூன்றாம் இடம் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூ.5,000, ரூ.3,000, ரூ.2,000 ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். கூடுதலாக, அரசுப் பள்ளி மாணவர்களில் இருவருக்கு தலா ரூ.2,000 சிறப்பு பரிசு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# Spirituality and Material Life

THE KOVAI HERALD



Questioner: Are spirituality and a material life compatible?

Sadhguru: This distinction of what is material life and what is spiritual life has come from a certain level of ignorance. What is it that you call as material, what is it that you are referring to as spiritual? When you sit here, can we separate whatever you are referring to as the spirit in you from your body? Your body is the material, it is the earth. Your body is just the essence of this Earth. So how can you separate the material and the spiritual? This separation itself is ignorance. Being materialistic or spiritual is just an idea. There is no such thing. There is no spirit without material, there is no material without spirit.

Whatever material that we handle, our homes, our relationships, our money, our other material things are about external arrangements that we make in our life for our external convenience, comfort and joy. Similarly, whatever inner arrangements we make for our inner wellbeing is spiritual. Can you just live with fantastic outside arrangements but internally you are a mess? Does it solve your problem? Or internally you are blissful but you have no food to eat, does that solve your problem? There is no such thing; there is no distinction. Both of them need to be organized, but with how much balance. What is the priority that you give to the two is individual. According to individual needs, one has to do it.

But making a distinction between the two is coming from certain ignorance. There is no such distinction. Life comes as a whole. There is no such thing as materialistic and spiritual. The very distinction is causing an unnecessary conflict. A conflict not between two things, a conflict between the same thing. One life that you are, you are creating a conflict. If you do this materialistic and spiritual, these kinds of distinctions, you will only become schizophrenic and suffer. So the question of compatibility does not arise. When you exist here as one life, dividing it and then trying to find compatibility between the two is a foolish thing to do.

# Lakshaka Tex LLP Honoured with CSR Circle of Honour at One World One Family Cultural Festival

THE KOVAI HERALD



▸ M.N.Padmanabhan, Managing Director of Lakshaka Tex LLP receiving the CSR Circle of Honour from Annapoorna Trust Founder, Sadguru Sri Madhusudan Sai.

At the One World One Family World Cultural Festival held this evening, Lakshaka Tex LLP was presented with the prestigious CSR Circle of Honour in recognition of its sustained contributions to education and healthcare. The award was received by M. N. Padmanabhan, Managing Director, a noted textile specialist known for his service to national and international industry councils.

Lakshaka Tex LLP has emerged as a trusted provider of high-quality medical apparel and uniform solutions for the healthcare and education sectors. The company integrates textile manufacturing with workforce support, producing safe, durable, and reliable garments for professionals serving communities across the country.

In the field of education, the company's CSR initiatives have strengthened skill development by equipping a Skill Development Centre with essential tools and materials, enabling students to receive specialised training in tailoring and stitching.

Within healthcare, Lakshaka Tex has contributed significantly to the Sri Madhusudan Sai Institute of Medical Sciences and Research, supplying consumables and medical garment kits that improve hygiene and comfort for patients. The company has also supported PBMT by assisting with operational and general expenses.

Festival organisers expressed their gratitude to Lakshaka Tex LLP for its impactful efforts and for upholding the spirit of service through sustained commitment to social welfare.

# KMCH Performs Revolutionary Dual-Chamber Retrievable Leadless Pacemaker Procedure

THE KOVAI HERALD



Dr. Lawrance Jesuraj





KMCH Coimbatore successfully implanted a retrievable dual-chamber leadless pacemaker. Pacemakers help your heart beat and keep up with the body's demands. Leadless pacemakers represent a revolutionary leap in pacing technology. Dr.Nalla G Palaniswami, Chairman of KMCH Hospitals, says, "Unlike their conventional counterparts, these devices are a single, self-contained unit that is significantly smaller— about the size of a large vitamin capsule. This groundbreaking procedure, performed under the expert leadership of Dr. Lawrance Jesuraj, marks the beginning of a new era in cardiology, offering patients a less invasive and highly effective alternative to traditional pacemakers. We are proud to have a team of doctors who are trained to implant this device and help patients recover these benefits.

Dr. Lawrance Jesuraj affirms the impact of this procedure: "We are setting a new standard, bringing this cutting-edge treatment to the people of Tamil Nadu. We are happy that we can pass the benefits of this technology to our patients." This innovative design reduces the risk of complications associated with leads, such as infection or fracture, and offers patients a more comfortable and less restrictive recovery.

Dr Arun Palaniswami, Executive Director, KMCH Hospitals, said, Cardiac Electrophysiology department at KMCH Hospitals has been a pioneer in bringing newer innovations to this part of Tamil Nadu. By bringing a dual chamber leadless pacemaker within a month after launching in India, KMCH proved again as a leader in Electrophysiology in Tamil Nadu. This revolutionary design eliminates the need for a surgical pocket and insulated wires. Crucially, the new procedure's innovative aspect lies in the device's retrievability, offering future flexibility for device upgrades or replacement—a significant advancement over earlier non-retrievable leadless models

## Voter List Revision Intensified in Coimbatore

# District Collector Orders Removal of Names in Three Categories



The special intensive voter list revision work is progressing rapidly across Coimbatore district. With over 32.25 lakh voters across the district's 10 Assembly constituencies, booth-level officers have been conducting door-to-door verification from November 4 to December 4, as instructed by the Election Commission of India.

As part of this verification process, names falling under three specific categories are scheduled to be removed from the electoral rolls. In particular, officials have identified several houses found locked during three consecutive visits by booth-level officers. Preliminary procedures have begun to remove the names of individuals residing in such households.

In this context, Coimbatore District Election Officer and District Collector Pawan Kumar released a video message to provide clarity to the public.

He stated that the special intensive revision began on November 4, and booth-level officers are distributing verification forms and collecting them after completion. He further noted that to ensure the public faces no inconvenience, mobile help desk vehicles have been deployed across various localities to directly receive voter applications.

The Collector urged all voters to extend full cooperation to the ongoing revision activities and make effective use of these services to ensure accurate and updated voter records.

# New GD Flyover gets clearance from the Airport Authority of India for extension till Neelambur



The State Highways Department's landmark G.D. Naidu Flyover—built at a cost of Rs. 1,621 crore between Uppilipalayam and Chinniyampalayam over a stretch of 10.1 km—was recently inaugurated by Chief Minister M.K. Stalin. The flyover has significantly eased congestion on the busy Coimbatore Avinashi Road.

In the next phase, plans to extend the flyover from Chinniyampalayam to Neelambur for an additional 5 km have moved a step forward, with the Airports Authority of India (AAI) granting the essential No Objection Certificate (NOC).

Coimbatore, Tamil Nadu's second largest city, has witnessed rapid growth over the past three decades. People from various districts have migrated here in large numbers for employment, making the city and its suburbs home to nearly 3 million residents. With Coimbatore also emerging as a major gateway to Kerala and an expanding IT hub, vehicular traffic has surged dramatically.

The Avinashi Road corridor, a lifeline for daily commuters, experiences severe traffic snarls—especially during peak hours. Commuters often spend more than an hour travelling from Ukadum to Karumathampatti due to heavy congestion and multiple traffic signals.

To address this, the State Highways Department earlier prepared a Detailed Project Report for the flyover extension at a cost of ₹80 lakh. The proposal recommends constructing a 5-km, 17.25-metre-wide elevated corridor at an estimated cost of ₹700 crore.

Officials noted that the stretch between Chinniyampalayam and Neelambur has no major junctions or crossing roads, making it feasible to build a flyover without entry and exit ramps. The structure will smoothly connect to the existing Neelambur flyover on the bypass road.

Speaking about the project, State Highways Divisional Engineer Samuthirakani said that the planned flyover passes adjacent to the airport's operational zone, making AAI approval mandatory.

"We have received the NOC from the Airports Authority of India. Approval has been granted to complete the flyover within eight years, by 2033," he said.

He added that the department had already held preliminary consultations to ensure that the flyover pillars do not conflict with the proposed Metro Rail alignment along Avinashi Road.

"Although there is no current update on the Metro Rail project, we still require a clearance from the Metro authorities. Once their approval is obtained, we will proceed with issuing tenders and begin construction," Samuthirakani said.

Once completed, the extended elevated corridor is expected to significantly ease traffic flow on the busiest stretch of Coimbatore and support the city's continued expansion as a commercial and IT hub.

# Nehru International School celebrates its 4th Annual Day "TARANGG"




THE KOVAI HERALD

The programme began with a welcome address and the lighting of the lamp in the presence of Adv. Dr. P. Krishnadas, Honorary Trade Commissioner of Mauritius-India, Chairman & Managing Trustee, Nehru Group of Institutions followed by his Presidential Address and Dr. Chaitanya Krishnakumar, Correspondent, Nehru International School & Nehru Kids Academy. The Chief Guest, Punitha Anthoniammal, Chief Education Officer, Tirupur Dt. and the Guest of Honour Ganesh Venkatraman, Indian actor, Model & Motivational Speaker and Nisha Ganesh, Actress & Anchor, appreciated the school's efforts in promoting holistic education.

The Annual Report was holistically presented by K S Sivaprakash, Principal. Followed by the Keynote address by Dr.Chaitanya Krishnakumar, Correspondent giving an overall view about Education with the motto "Tradition of Excellence".

# Wildlife Conservation Day
# A Call to Protect Earth's Endangered Species

THE KOVAI HERALD

■ K.Abirami



Every year, Wildlife Conservation Day is observed across the globe to highlight the urgent need to protect endangered species and preserve the planet's fragile ecosystems. At a time when climate change, deforestation, pollution, and illegal hunting are rapidly shrinking wildlife populations, this day serves as a powerful reminder of humanity's responsibility to safeguard nature.

Marking the occasion, environmental groups, students, and forest officials organized awareness rallies, tree-planting drives, and educational workshops in various parts of the country. Experts emphasised that India—home to tigers, elephants, rhinoceroses, and several unique species—has a crucial role to play in global conservation efforts.

Speaking at a seminar, wildlife biologists noted that habitat loss remains the biggest threat to biodiversity. Expanding cities, agricultural land conversion, and mining activities have severely disrupted natural habitats, forcing wildlife into human settlements and increasing conflict. They stressed the importance of creating wildlife corridors and strengthening protected area networks.

Forest officials highlighted the success of recent conservation programmes aimed at increasing tiger and elephant populations, but cautioned that poaching and illegal wildlife trade continue to undermine progress. They called for stricter enforcement of wildlife protection laws and enhanced community participation.

Schools and colleges marked the day by conducting debates and exhibitions to engage young learners. Many students pledged to reduce plastic use, support eco-friendly initiatives, and promote harmony with nature.

Environmental activists urged citizens to see wildlife conservation not as a one-day event, but as a continuous commitment. "Protecting wildlife is not just about saving animals—it is about preserving our ecological balance and ensuring a sustainable future for generations to come," one speaker noted.

As the world celebrates Wildlife Conservation Day, the message remains clear: only collective action can protect Earth's precious species and the natural heritage that sustains life on the planet.

# வனம் அனைவருக்கும் சொந்தம்... வனத்தை பாதுகாப்பது நமது கடமை

## வெள்ளியங்கிரி கோயில் நிர்வாகக் குழு தலைவரும், ஸ்ரீதேவி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளருமான சிவகணேஷ் வேண்டுகோள்



தி கோவை ஹெரால்டு

தென்கயிலாயம் என்றழைக்கப்படும் வெள்ளியங்கிரி மலையில் ஆன்மீக பயணத்தின் போது பக்தர்கள் வீசிய 10 டன் நெகிழி உள்ளிட்ட கழிவுகளை சிவனடியார்கள் அகற்றினர். இது குறித்து வெள்ளியங்கிரி ஆண்டவர் ஆலயத்தின் நிர்வாகக் குழு தலைவரும், ஸ்ரீதேவி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளருமான சிவகணேஷ் கூறும் போது, “மேற்கு தொடர்ச்சி மலையின் ஒரு அங்கமாக இருப்பது தென் கயிலாயம் என்று போற்றப்படும் வெள்ளியங்கிரி மலை. ஏழு மலைகளைக்கொண்ட இந்த ஆன்மீக சுற்றுலா தலத்தில், ஏழாவது மலையில் எழுந்தருளிய வெள்ளியங்கிரி ஆண்டவர் சுயம்பு லிங்கத்தை தரிசிக்க, உலகம் முழுவதுமிருந்து சிவ பக்தர்கள் படையெடுப்பது வழக்கம். யானை, புலி, சிறுத்தை, கரடி, காட்டு பன்றிகள் என ஆபத்தான விலங்குகள் வசிப்பிடமாக இருக்கும் வெள்ளியங்கிரி மலையில், ஆண்டு தோறும் பிப்ரவரி முதல் மே வரை பக்தர்கள் தரிசனத்துக்காக வனத்துறை அனுமதித்து வருகின்றது. ஜூன் முதல் ஜனவரி வரை பாதுகாப்பு காரணங்கள் அடிப்படையில் பக்தர்களுக்கு அனுமதி தரப்படுவதில்லை.

இந்த நிலையில், கடந்த ஆண்டில் வெள்ளியங்கி மலைக்கு சென்ற பக்தர்கள் நெகிழி உள்ளிட்ட வனத்துக்கும், வன உயிர்களுக்கும் ஒவ்வாத குப்பைகளை அதிகளவில் போட்டு விட்டு சென்றிருக்கின்றனர். வனத்தையும், வன விலங்குகளையும் பாதுகாக்கும் பொருட்டு, வெள்ளியங்கிரி மலை பாதுகாப்பு அமைப்பினர், வனத்தில் பக்தர்களால் வீசப்பட்ட குப்பைகளை அகற்ற திட்டமிட்டனர். அடியேன் தலைமையிலான குழு 18 வாரத்துக்கு முன் உழவாரப்பணியை ஆரம்பித்தது. வனத்துறை அனுமதியுடன் வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை நாட்களில், இயற்கை மற்றும் வன உயிர் ஆர்வலர்களை ஒன்றிணைந்து, இந்த உழவாரப்பணிகளை செய்திருக்கின்றனர். வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமை நாட்களில் 60 முதல் 80 பேர் வீதம் 18 வாரங்களாக, வெள்ளியங்கிரி மலையின் ஏழு மலை முகடுகளிலும் வீசப்பட்டிருந்த நெகிழி பைகள், பாட்டில்கள், சாக்லேட் பிஸ்கட் குளிர்பானம் உள்ளிட்ட திண்டண்டங்களின் நெகிழி பைகள், கண்ணாடி பாட்டில்கள், பாலியெஸ்டர் ஆடைகள், காலணிகள் என வனத்துக்கு ஒவ்வாத ஏராளமான கழிவுகளை சேகரித்து, பல கிலோ மீட்டர் தோலில் சுமந்து பூண்டி அடிவாரம் கொண்டு வந்தனர். இந்த ஆண்டு மட்டும் சுமார் பத்து டன் (10,000 கிலோ) நெகிழி உள்ளிட்ட கழிவுகளை சேகரித்து, வாரம்தோறும் மறு சுழற்சிக்கு ஒப்படைத்திருக்கின்றனர்.

கரடு முரடான மலை பாதை, பாறை இடுக்குகள் என பல இடங்களில் வீசப்பட்டிருந்த கழிவுகளை, கடும் இயற்கை சீற்றங்களுக்கிடையில் உழவாரப்பணியை செய்து முடித்திருக்கின்றனர். யானை, புலி, சிறுத்தை, கரடி, காட்டு மாடு, காட்டு பன்றி உள்ளிட்ட ஆபத்தான விலங்குகள் வசிக்கும் இந்த வெள்ளியங்கிரி மலையில், வனத்துறை வழிகாட்டுதலில் இந்த பணியை செய்து முடித்திருக்கின்றனர். உழவாரப்பணி செய்தவர்கள் வனத்தில் கடும் நெருக்கடி மற்றும் சவால்களை சந்தித்து, இப்பணியை செய்து முடித்தனர்.



■ உழவாரப் பணியில் ஈடுபட்ட சிவனடியார்களுக்கு நினைவு பரிசு வழங்கினார் ஸ்ரீ தேவி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் சிவகணேஷ்



வனத்தில் வீசப்பட்ட நெகிழி உள்ளிட்ட குப்பைகளை உட்கொண்ட யானைகள், மான்கள், காட்டு மாடுகள் உள்ளிட்ட விலங்குகள் வயிறு உபாதைகளுக்கு உள்ளாகி இயற்கைக்கு மாறான முறையில் பரிதாபமாக பலியாகின்றன. வன உயிர்களை காப்பாற்றும் பொருட்டே, வனம் காக்கப்படும் என்பதனை பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் உணர்ந்து, நெகிழி உள்ளிட்ட குப்பைகளை வனத்தில் வீசகூடாதுஎன்றும், வனத்திற்குள் தவிர்க்க முடியாமல் உணவு தண்ணீர் உள்ளிட்டவற்றை கொண்டு செல்லும்போது, நெகிழி உள்ளிட்ட குப்பைகளை முறையாக குப்பை தொட்டிகளுக்குள் போட வேண்டும் என இயற்கை ஆர்வலர்கள் அறிவுரைகளை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றன என சிவ கணேஷ் கூறினார் மேலும் அவர்,

வனம் மனிதர்களுக்கு மட்டுமே சொந்தம் என்பதுபோல செயல்படக்கூடாது, வனம் அனைவருக்கும் சொந்தம். வனத்தை பாதுகாப்பது நமது கடமை வனம் பல்லுயிர்களுக்கான வாழ்விடம் என்பதனை உணர்ந்து, வனத்திற்குள் பயணிப்போர் செயல்பாடுகள் அமைய வேண்டும். அதே போன்று வனத்தில் கடைகளை வைக்கும் வியாபாரிகள் நெகிழி பைகளை பன்படுத்த கூடாது என்ற கட்டுப்பாட்டை கட்டாயமாக பின்பற்ற வேண்டும். வனத்துறை அதிகாரிகள் இதனை தீவிரமாக கண்காணிக்க வேண்டும். கட்டுப்பாடுகளை கடத்து, காடுகள் மனிதர்களை கடந்து பல்லுயுர்களுக்கான வாழ்விடம் என்பதை பக்தர்கள் உணர்ந்து செயல்பட்டாலே, வனம் ரணமாவது தடுக்கப்படும் என ஸ்ரீ தேவி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் சிவ கணேஷ் தெரிவித்தார்.

உழவாரப் பணியில் ஈடுபட்ட சிவனடி யார்களுக்கு வெள்ளியங்கிரி ஆண்டவர் புகைப்படம் , நினைவு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.




தி கோவை ஹெரால்டு

கோவை சரவணம்பட்டி சிறப்புமிக்க ப்ரோசோன் மால் -ல் ஆண்டுதோறும் நடைபெறகூடிய “கோவையின் மிகப்பேரிய சேல்” ஆன பிளாக்ஃபிரைடே சேல் 60 சதவீதம் வரையிலான தள்ளுபடி விற்பனை இந்த ஆண்டும் தொடங்கியுள்ளது. இதன் சிறப்பம்சமாக மாலில் உள்ள அனைத்து பிராண்டுகளின் மீதும் 60% வரை தள்ளுபடி விற்பனை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு விற்பனை நவம்பர் 28 முதல் தொடங்கி 30 வரை வெள்ளி சனி, ஞாயிறு என 3 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதன் சிறப்பம்சமாக 50 மேற்பட்ட பிராண்டுகளின் மீதும் 60% வரை தள்ளுபடி விற்பனை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஃபேஷன் & லைஃப்ஸ்டைல், எலக்ட்ரானிக்ஸ் & வீட்டு உபயோகப் பொருட்கள், மொபைல் & லேப்டாப், ஆக்சஸரிகள், டிராவல் & லக்கேஜ்கள், பாதணிகள், வைரம் & நகைகள், சூப்பர் மார்க்கெட் போன்ற பிராண்டுகள் மீதும் தள்ளுபடி விற்பனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஃபுட் கோர்ட் பிராண்டுகளின் மீதும் சிறப்பு சலுகைகள் வழங்கப்படுகின்றன.

“கோவையின் மிகப்பேரிய சேல்” ஆன பிளாக்ஃபிரைடே சேல் 60 சதவீதம் வரையிலான தள்ளுபடி விற்பனை கோவை மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.



1972
அரோமா®
அக்மார்க் நெய்
“அம்மாவின் அன்பைப்போல!!!”




உணவின் சுவை, உடலின் ஆரோக்கியம் -
பாரம்பரிய முறையில்!

அரோமா அக்மார்க் நெய் - நம் குடும்பத்தின் நம்பிக்கை மற்றும் ஆரோகியத்திற்கான தேர்வு. இதன் தனித்துவமான சுவை மற்றும் நறுமணத்திற்கு பெயர் பெற்றது. அரோமாவின் நெய் போல அதன் இதர தயாரிப்புகளும் தூய்மையும் உயர்ந்த தரமும் கொண்டவை. ஒவ்வொரு துளியிலும் தலைமுறைகளை தாண்டிய மரபும், முழுமையான நலனும் நிறைந்துள்ளன.1972-ஆம் ஆண்டு முதல், அரோமா நம் பாரம்பரிய சுவையை பாதுகாத்து வருகின்றது - இது நம் ஊரின் பெருமை!

Creative Visualization
aroma__official
www.aromamilk.com

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)